1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது

Telegrams:
"CATHOLIC PRESS"
JAFFNA.

Telephone:
NO. 100

# சத்தியவேத பாதுகாவலன்

" கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம் "

78-ம் புத்தகம் 3-ம் இல. யாழ்ப்பாணம் 1953-ம் ஆண்டு தைமாதம் 22-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10

## இந்திய கத்தோலிக்கரும் புதிய இந்தியாவும்

அர்ச். தோமையாரினதும், அர்ச். சவேரியாரினதும் நூற்றண்டுவிழாக்கள் எர்ணுக்குளநகரிலே சமீபத்தில் சம்பிரமமாகக் கொண்டாடப்பட்டன. அக்கொண்டாட்டத்தின் இறுதிவைபவத்தின்போது பரிசுத்த பாப்பரசர் வத்திக்கான் வானொலிமூலம் விடுத்தசெய்தி வருமாறு :

இந்தியாவுக்குச் சுவிசேஷ ஒளியைக் கொண்டுவந்த வீரர்களாகிய தோமையாரினதும், சவேரியாரினதும் நூற்றுண்டு விழாக்களைக் கொண்டாடுவதற்காக எர்ணுக்குளநகரிலே கூடியிருக்கும் எமது நேசகுமாரர்களே! குமாரத்திகளே! சந்தோஷமும், தந்தைக்குரிய கரிசனமும்நிறைந்த நமது இருதயத்திலிருந்து புறப்படும் எமது வாழ்த்துதல்களை அனுப்புகிறோம். அங்கு மலையாளத்திலிருந்தும், தென்னிந்தியாவிலிருந்தும், மற்றும்உங்கள் நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் நீங்கள் குழுமியிருக்கிறீர்கள். நமது பிரதிநிதியுடனும் உங்கள் மேற்றிராணிமார்களுடனும் ஏகோபித்து, நீங்கள் இந்த மகத்தான நேரத்தில் இரக்கத்தின் தந்தையும், எல்லா ஆறுதலுக்கும் ஊறணியுமாகிய தேவன்பால் உங்களிருதயங்களை எழுப்பி, அந்த இரு மிஷனரிகளின்மூலம் நீங்கள் பெற்றுக்கொண்ட விசுவாசமென்னும் விலைமதியாத பொக்கிஷத்திற்காக நன்றிசெலுத்துகிறீர்கள்.

ஆண்டவருடைய திருவிலாவிலும், கரங்களிலுமுள்ளகாயங்களில் தமது விரலைவைத்துத் தமது விசுவாசத்தைத் திடப்படுத்திக்கொண்ட அப்போஸ்தலரையே உங்களுக்கு வேத ஒளியைக் கொண்டுவருந்தூதராகத் தேவன் தெரிந்தெடுத்தது பற்றி நீங்கள் பெருமைபாராட்டுவது நியாயமே. இந்தஅப்போஸ்தலர் இந்தியாவுக்குவந்து பத்தொன்பது நூற்றுண்டுகளாகின்றன. அவரிடம் தேவனின் வல்லமை மிகுந்திருந்தது. அதனால், மேனாட்டிற்கும், இந்தியாவுக்கும் தொடர்பில்லாதிருந்த பலநூற்றுண்டுகளிடையேயும், பல்வேறு இடைஞ்சல்கள் சோதனைகளிடையேயும், அந்தஅப்போஸ்தலரால் நிறுவப்பட்ட கிறீஸ்தவசமுகம் அவர்அளித்த பொக்கிஷத்தைப் பத்திரமாகக் காப்பாற்றிவந்து, இந்தியாவுக்ுக் கடற்பாதை கண்டுபிடிக்கப்பட்டவுடன் 15-ம்நூற்றுண்டினிறுதியில் மேனுட்டிலிருந்துவந்த கிறீஸ்தவர்களுடன் கைகோர்த்துக்கொண்டது. உங்களிடையே தோமையார் கிறீஸ்தவர்கள் என்று சொல்லிக்கொள்ளுகிறவர்கள் இந்தஅப்போஸ்தொலிக்க தொடர்பைப்பற்றிப் பெருமை பாராட்டிக்கொள்வது பொருத்தமுடையதேயாகும். இந்தச்சந்தர்ப்பத்தில் அதை நாம் மகிழ்ச்சியுடன் ஆமோதிக்கிறோம். அவர்களுடைய தீவிர முயற்சியாலும் அப்போஸ்தலத்துவ உணர்ச்சியாலும் பல்வேறு நல்லகைங்கிரியங்கள் நிறைவேறிவருகின்றன. ஏராளமான குருமாரும், கன்னிகாஸ்திரிமாரும் சேவைபுரிந்து வருகின்றார்கள். இந்தஉற்சாகமும், அப்போஸ்தல உணர்ச்சியும் உங்களிடையே எப்பொழுதும் நிலைத்திருக்குமென நம்பியிருக்கிறோம்.

இந்தமாதம் சவேரியாரது மரணத்தின் நான்காவது நூற்றுண்டையும் குறிக்கும்மாதம். அவர் மரணமடையும்போது அவருக்குவயது 46. அவர் பத்து வருடங்களே ஆசியாவில்உழைத்தார். ஆனல், அந்தக்குறுகிய காலத்தில் இந்தியாவின் மேற்குக் கரையிலிருந்து யப்பான் வரையிலுள்ள நாடுகளில் பல்லாயிரம்மக்களை மனந்திருப்பினர். அவர் மிகப்பெரிய திட்டங்களை வகுத்தவர். மிகப்பெரிய காரியங்களைச் சாதித்தவர். எனவே, அவரை உங்கள்நாட்டின் இரண்டாவது அப்போஸ்தலரென அழைத்துவருவது பொருத்தமுடையதே. அவரைத் திருச்சபையும் கிழக்குநாடுகளின் பாதுகாவலராகவும், எல்லா மிஷன்களினதும் பாதுகாவலராகவும் தெரிந்தெடுத்தது. இந்தியாவின் தென்பகுதியில் அவர் வேதம்போதித்தது உங்கள் அதிர்ஷ்டவசமேயாம். அவர் போதகத்தாலும், செபத்தாலும், தபத்தாலும் கடந்த

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

## பணிவாய்நெஞ்சே!

விருத்தம்

1

ஏகபரம் பொருளான ஈசன்தன்னை
இருவினைக்குங் கதியருளும் இறைவோன் தன்னை
மாகருணைத் தொழில்மூன்றும் வகுத்தோன் தன்னை
மருவியநாற் பொருளளிக்கும் வள்ளல் தன்னைத்
தேகமுதல் அஞ்சடக்கி யறுவரென்னும்
தீயபகை தான்களைந்து தெவிட்டா வின்பம்
ஆகவுயர் ஆண்டவனை யருளின் கோனை
அன்புகனிந் தென்புருகப் பணிவாய் நெஞ்சே!

2

மண்ணினுக்குப் பவச்சிறைமீள் மன்னர் மன்னன்!
மனவாக்குக் காயமெலாம் வழுத்தும் வள்ளல்!
எண்ணினுக்கும் ஏட்டினுக்கும் புலவர் போற்றும்
எப்பெரிய கற்பனைக்கு மெட்டாச் சோதி!
கண்ணினுக்கு மொளிதருவோ னிருக்கும் போதே
கரும்பிருக்க விரும்பை மென்று களைக்கலாமோ?
பண்ணினிக்கும் ஏழிசையாற் பாடிப் பாடிப்
பரம்பொருளை நிரந்தரமும் பணிவாய் நெஞ்சே!

(தொடரும்)

"ஞானி"

## இந்திய புதிய கருதினல்

கடந்த 250 வருடங்களிலும் முதன்முறையாகக் கருதினல்மார் திருச்சங்கமானது சென்ற 12-ந் திகதி திங்களன்று பரிசுத்த பாப்பரசர் 24 புதியகருதினல்மாரை ஆக்கியபோது தனக்குள்ள 70 அங்கத்தவர்களையும் பூரணமாகக் கொண்டிருப்பதாயிற்று. அப்போது பாப்பரசர் அவர்களைநோக்கி: "கத்தோலிக்க திருச்சபை பொதுவாயிருப்பதன் அறிகுறிக"ளாகப் பணியாற்றுங்களெனக் கூறிநின்றார். பம்பாய் அதிமேற்றிராணியாரான கிறுசியாஸ் ஆண்டவர் தாம்கருதினலாக்கப்படும் அதிகாரப்பத்திரத்தைப் பெற்றுக்கொண்ட திருவைபவத்தின்போது, ஐம்பதுக்குமேற்பட்ட இந்தியகுருமாரும், குருத்துவமாணவரும் சமுகமாயிருந்தார்கள். ரோமைநகரின் மத்தியிலுள்ள விசுவாசப்பரப்புதற்சபைத் திருச்சங்க புராதன மாளிகையின் பிரதானவரவேற்புச்சாலையிலே கிறுசியாஸ் ஆண்டவருக்குச் சிம்மாசனம் ஒன்று சித்தஞ்செய்யப் பட்டிருந்தது. அதற்குப்பக்கத்திலே அவரது புதிய உடன்கருதினலும், 76 வயதுடையவரும், விசுவாசப்பரப்புதற்சபைத் திருச்சங்கத்தின் காரியதரிசியுமான செல்சோ கொஸ்ரான்ரினி ஆண்டவரின் சிம்மாசனம்இருந்தது. உயர்ந்தவரும், மெல்லியவருமான கிறுசியாஸ் அதிமேற்றிராணியாரின் முகவமைப்பும் அங்கஅமைப்பும் பரிசுத்த பாப்பரசரை ஒத்திருந்தன. இவர்கருதினலாக்கப்பெற்றதையிட்டு இந்தியஅரசாங்கம் அனுப்பிவைத்த சோபனவாழ்த்துச் செய்தியிலே, "ரோமான்கத்தோலிக்க திருச்சபையின் அதிஉந்நத குருசிரேஷ்டர்களில் ஒருவராக இந்தியசுதேசி ஒருவர் அங்கீகரிக்கப்பெற்ற சரித்திரபூர்வமான சம்பவ"மென்று குறிப்பிட்டிருக்கிறது.

பரிசுத்தஸ்தானத்தினிடமாக இருந்துவருகின்ற இந்திய அரசாங்க பிரதிநிதியாகிய ஜனப் அசாவ் அலி அவர்கள் சுவிற்சர்லாந்த தலைநகரிலிருந்து தந்திமூலம் பின்வரும் வாழ்த்துச் செய்தியை அனுப்பியிருந்தார். "இந்தியாவிலே கத்தோலிக்க திருச்சபையின் சரித்திரத்தில் பரிசுத்தபிதாவிடமிருந்து பெறவிருக்கும் தங்கள் ஒப்பற்ற விசேஷஉரிமையாய் இருப்பதாகிய உயர்ந்த கௌரவத்தையிட்டு எனது சார்பாகவும்,

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

# தேவாமுதம் அல்லது ஞானவாசிப்பு

(முன்தொடர்ச்சி)

5. இதனை ஓர் ஒப்பனையால் விளக்குவோம். நீக்கோழிகளுக்கு இரக்கைகள் இருந்தபோதிலும் நன்றாய்ப்பறக்காது. கோழிகள்பறந்தாலும் தரையோடு அருமையாய்ப்பறக்கும். இதற்கு விரோதமாய் அண்டரண்டபட்சிகளும், புருக்களும், தகையிலான்குருவிகளுஞ் சலியாமல் உயரமாய், வேகமாய்ப்பறக்கும். இத்தன்மையாய்ப் பாவிகள் சுவாமியைஅண்டி உயராமல் உலகத்திலேயேசுற்றி, உலகத்தையேநாடிச் சகலத்தையும் நடத்திவருகிறார்கள். இன்னும் மெய்யானபக்தியை அடையாதவர்கள் சுவாமியை நேசித்துக் கொஞ்சம்உயர்ந்து போனபோதிலுஞ் சுறுசுறுப்பின்றி, அருமையாய், மெதுவாய்ச் செல்லுவார்கள். மெய்யான பக்தியுள்ளவர்கள் மாத்திரஞ் சுவாமியிடத்தில் வேகமாய் ஓயாமற்பறந்தாற்போல ஏறுவார்கள். ஒரேவார்த்தையிற் சொல்லவேண்டுமாகில் மெய்யான பக்தியானது, ஞானக்காரியங்களிலுள்ள வேகமும், சுறுசுறுப்புமேயன்றி வேறல்ல. நமது கிருத்தியங்களையெல்லாஞ் சுறுசுறுப்பாய் ஆசையோடு செய்வதற்கு இதுவேகாரணமாம். தேவசிநேகம் நாம் சுவாமியுடைய கற்பனைகளையெல்லாஞ் சாதாரணமாய் அனுசரிக்கக் காரணமாய் இருப்பதுபோல நாம் அவைகளை வெகுஆவலோடும், சாக்கிரதையோடும் செய்வதற்கு மெய்யானபக்தியேகாரணமாம். ஆதலால் சருவேசுரனுடைய முறைமையெல்லாத்தையும் அனுசரியாதவன் நீதிமானுமல்ல, பக்தியுள்ளவனுமல்ல. ஏனெனில், நீதிமானாய்இருக்கத் தேவசிநேகம் வேண்டும். பக்தியுள்ளவனாய்இருக்கத் தேவசிநேகமுமன்றி நற்கிரிகைகளைச் செய்வதற்குப் போதவலும், சுறுசுறுப்பும்இருக்கவேண்டும்.

6. மெய்யானபக்தியானது மேலான தேவசிநேகமாய் இருப்பதாலே அதினால் நாம் சருவேசுரனுடைய முறைமைகளையெல்லாம் ஆவல்சாக்கிரதையுடன் அனுசரிப்பதுமன்றி இன்னும் தேவஏவுதலுக்கு அமைந்து கடமையில்லாத அநேக நற்கிருத்தியங்களையும் நம்மால் இயன்றவரையில் செய்வோம். வியாதிநீங்கி நடக்கத் தொடங்குகிறவன் அவசரமானமட்டும் மெதுவாய் மெல்ல மெல்லநடப்பான். நெடுங்காலம் பாவவியாதியால் மெலிந்தவனும் பாவத்தைவிட்டுப் புண்ணியவழியில் நடக்கத் தொடங்கும்போது இப்படியே கடமையானமட்டும் மெதுவாய்ப் பிரயாசத்தோடு நன்னெறியில் நடப்பான். ஆனால், இவனுக்கு மெய்யான பக்தியுண்டானபிறகு நல்லசௌக்கிய முள்ளவனைப்போல் தைரியமாய் நடந்து சுவாமிகற்பித்த கடமையான புண்ணிய வழியிற் சுறுசுறுப்பாய்ச் செல்லுவதுமன்றிக் கடமையில்லாத புண்ணிய சாங்கோபாங்க நெறியில் வேகமாய் ஓடுவான்.

7. கடைசியாய் அக்கினிக்கும், அதன் சுவாலைக்குமிருக்கும் சம்பந்தம் எப்படியோ அப்படியே தேவநேசத்துக்கும் மெய்யான பக்திக்கும் உள்ள சம்பந்தம். ஏனெனில், தேவநேசம் ஆத்துமத்தின் ஞானஅக்கினியாய் இருப்பதால் அது வெகுவாய்எரிந்தால் பக்தியென்று அழைக்கப்படும். ஆகையால், மெய்யானபக்திக்கும், தேவசிநேகத்துக்கும்உள்ள விசேஷவித்தியாசம் ஏதெனில், சிநேகஅக்கினி மெய்யானபக்தியால் சுவாலையாகிச் சுவாமியுடைய கற்பனைகளையுமல்லாமல் புண்ணியசாங்கோபாங்கநெறிக்கடுத்த ஆலோசனை தேவஏவுதல்களையும் சுறுசுறுப்புவிருப்பத்தோடு அனுசரிக்கச்செய்யும்.

### கிறீஸ்துநாதர் அனுசாரம்

கி. அதி. 3-ம் புத். — 4-ம் அதி. —5.

"கிறீஸ்துநாதர் மூறையிடுவது"

சிலர் ஞானப்புத்தகங்களிலோ, சுரூபங்களிலோ, வெளியடையாளங்களிலோ, உருவங்களிலோ பக்திவைப்பார்கள். சிலர் வாயினால் அடிக்கடி நமது நாமத்தை உச்சரிக்கிறார்கள், ஆனால், அவர்கள் தங்கள் மனதோடு நம்மைத் துதிக்கிறது அபூர்வம். வேறுசிலரோ புத்தித்தெளிவும், இருதயபரிசுத்ததனமு முடையவர்களாய், நித்தியகாரியங்களில் எக்நேரமும் ஆவலுற்று, உலகப்பேச்சுகளை வருத்தத்தோடு கேட்டு, உலகசீவியத்துக்கு அவசியமானவைகளை விசனத்தோடு நிறைவேற்றிவருகிறார்கள். இவர்கள் சத்தியத்தின் இஸ்பிரீத்தானவர் தங்களிடம் சொல்வதை உணருகிறார்கள். ஏனென்றால், பிரபஞ்சகாரியங்களை நிந்தித்துப் பரலோககாரியங்களை நேசிக்கவும், உலகத்தை அசட்டைசெய்து இரவும்பகலும் பரலோகத்தை ஆசிக்கவும் அவர் அவர்களுக்குப் போதிக்கிறார்.

### பத்திநெறிப் பிரவேசம்

1-ம் பா. 2-ம் அதி.

மெய்யானபக்தியின் மேன்மையும், குணங்களும்

1. சருவேசுரன் இஸ்றவேல் சனங்களுக்கு வாக்குத்தத்தஞ்செய்த பூமியைப் பரிசோதித்துப்பார்க்க மோயீசனால்அனுப்பப்பட்டவர்களில்யோசுவே, காலேப் என்பவர்கள்தவிர மற்றவர்கள் அந்தத்தேசத்துக்கு இஸ்றாயேலித்தார்களைப் போகவொட்டாதபடிக்கு அந்தப்பூமியானது மகாகெட்டதென்றும், அதன் ஆகாயம் விஷம்போலவிருப்பதால் மனிதர் அதில்வெகுகாலஞ் சீவிக்கக்கூடாதென்றும், அதில் வசிப்பவர்கள் இராக்ஷதராகையால் மற்றமனிதர்களை வெட்டுக்கிளிகளைப் போலப் பிடித்து விழுங்குகிறார்களென்றும் சொன்னார்கள். பிரியசகோதரமே, இத்தன்மையாகவே உலகிலுள்ளவர்கள் மெய்யான பக்தியைக்குறித்துத் தங்களாலியன்றவரையில் விபரீதமாய்ப் பேசுவார்கள். பக்தியுள்ளவர்களைச் சோர்ந்தமுகமாய்க் காட்டிப்பழித்து மெய்யானபக்தியால் மனிதனுடையகுணம் கெட்டுப்போகிறதென்றும், எவர்க்குஞ் சகிக்கக்கூடாத கஸ்திஏக்கமுள்ளதாய் மாறிப்போவதென்றுஞ் சொல்லுவார்கள். ஆனால், யோசுவே, காலேப் என்ற இருவரும் வாக்குத்தத்தப்பூமி மகாசெழுமை சௌக்கியமானது; அதில்வசிப்பது மகாஇன்பத்துக்குரியதே என்று உள்ளபடி உறுதியாய்ச்சொன்னார்கள். இத்தன்மையாகவே பத்தியுள்ளசீவியம் பாக்கியமானசீவியம்; நேசத்துக்குரிய சீவியம் இன்பமான சீவியமென்று சகலஅர்ச்சியசிஷ்டர்களின்வாக்கால் இஸ்பிரீத்துசாந்துவானவர் நமக்குக்கற்பிக்கிறார். நமதுஆண்டவராகிய யேசுக்கிறீஸ்துநாதர்தாமே தமது மாதிரிகை, படிப்பனையால் இதை எண்பிக்கிறார். நமக்கு நிச்சயமாய்ச் சொல்லுகிறார்.

2. பக்தியுள்ளவர்கள் உபவாசமாயிருப்பதையும் இராக்கண்விழித்து வேண்டிக்கொள்வதையும், நிந்தனைகளைப் பொறுமையாய்ச்சகித்து வியாதிக்காரருக்குப் பணிவிடைசெய்து ஏழைகளுக்குத் தானதர்மஞ் செய்வதையும் கோபத்தையடக்கி ஆசாபாசங்களைவென்று இன்பசுகங்களை வெறுத்துச் சுபாவத்துக்குக்கஷ்டமும் வருத்தமுமான இன்னும்பல நற்கிருத்தியங்களைச்செய்வதையும் உலகம்பார்த்து வருகிறது. ஆனால், அந்தரங்கபக்தியானது இந்தநற்கிருத்தியங்களையெல்லாம் பிரியமாகவும், இன்பமாகவும், எளிதாகவும் ஆக்கிவிடுகிறதை உலகம்

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

# சுதேச வர்த்தமானம்

### பனங்கட்டி உற்பத்திச்சாலை

உள்நாட்டுமந்திரியாரான திரு. ஏ. இரத்நாயக அவர்கள் யாழ்ப்பாணத்துக்கு விஜயஞ்செய்திருந்தபோது, சென்ற 17-ந்திகதி சனிக்கிழமை கல்விமந்திரியாருடன் மாதகலுக்குச்சென்று அங்கு புதிதாக அமைக்கப்பட்ட பனங்கட்டி உற்பத்திச்சாலையைத் திறந்துவைத்தார். பனங்கட்டிகாய்ச்சி எடுப்பதற்கான பதநீரைக்கொண்ட பானை ஒன்றுக்குத் தீமூட்டியபின்னர் அவர் பேசியபோது, கூட்டுறவு முறையிலே பதநீரிலிருந்து பனங்கட்டி உற்பத்தி செய்யும்முயற்சி என்மனதைப் பெரிதும் கவர்ந்துள்ளது; கூட்டுறவுமுறை அபிவிருத்தியில் அரசாங்கம் செய்யக்கூடிய உதவிக்கு ஒருஎல்லைஇல்லை; சீனிவிலை உயர்ந்துகொண்டுபோகும் இந்தவேளையிலே இந்தச்சாலை பனங்கட்டிஉற்பத்திசெய்தால் சனங்கள் அதனை உபயோகிப்பார்கள்; இது தேசியசெல்வத்திற்குப் பேருதவியாகுமெனக் கூறினார்.

### மீசாலைப் புதிய சந்தை

சாவகச்சேரியிலிருந்து சிலமைல் தூரத்திலுள்ள மீசாலையில்அமைக்கப்பட்ட புதியகிராமச்சந்தை சென்ற 17-ந் திகதி திறந்துவைக்கப்படலாயிற்று. அவ்வேளை அச்சந்தையிலே முதற்தடவையாக விற்பனவு, கொள்வனவு நடத்துவதற்காக இரண்டாயிரம் பேருக்குமேல் கூடியிருந்தார்கள். சாவகச்சேரிப்பிரதிநிதியும், உணவு - கமத்தொழில்மந்திரியாரின் பாராளுமன்றக்காரியதரிசியுமான திரு. வி. குமாரசாமி அவர்கள் அங்குபேசியபோது, இப்பகுதியிலுள்ளபெண்கள் இந்தச்சந்தைக்கு ஆதரவளித்துத் தங்களுக்குத்தேவைப்படும்பொருட்களை இதில் பெற்றுக்கொள்வதன்மூலம் இடையில்நின்று கொள்ளைலாபம்அடிப்பவர்களை நீக்கவேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்.

### முதலியார் கனகநாயகம்

கண்டியிலே இந்தியநாஷனல்வங்கியின் தலைமைச்சிறுப்பாய் விளங்கியிருந்தவரான அரசமாளிகைவாசல் முதலியார் என். கனகநாயகம்அவர்கள் நாற்பதுவருடசேவையின்பின்னர் தற்போதுஇளைப்பாறியிருக்கின்றார். லண்டன்வங்கிஸ்தாபன பரீட்சையில் அரங்கேறிய முதல்இலங்கையர் இவரே. இலங்கையிலுள்ள அதிகம்பிரதமசிறுப்பராக விளங்கியிருந்தவரும் இவரே. இவரிடமாக இவர்புதல்வர் திரு. சி. சங்காகுமாரன் நியமனஞ்செய்யப்பெற்றிருக்கின்றார். அரசமாளிகை வாசல்முதலியார் கனகநாயகம் அவர்கள் இலங்கையிலே வர்த்தகவங்கிஸ்தாபிக்கப்பட்ட காலமுதல் அதனுடன் சம்பந்தப்பட்டிருந்த ஓர்குடும்பத்தைச் சேர்ந்தவர். இற்றைக்கு நாற்பது வருடங்களின்முன்னே இவர் தமது தந்தையாரான அதிகார் ஏ. நாகநாதர் மூந்தஓறியன்ரல் வங்கியிலும், பின்னர் நுவரெலியிலே இந்தியநாஷனல்வங்கிஸ்தாபகமானகாலமுதல்அதிலும் சிறப்பாகக்கடமையாற்றிப் பிரசித்திபெற்றிருந்தார்.

### களவில் வந்த அபின்

காங்கேசன்துறைத் தடைஉத்தியோகஸ்தரான திரு. எம். ஈ. வீரசிங்கஎன்பவர் களவில்வந்த 68,000 ரூபா பெறுமதியான அபினையும், புடவைகளையும் சென்றசனிக்கிழமை பூநகரியிலேகண்டுபிடித்துக் கைப்பற்றினர். இவற்றிற்சில அங்குமட்டுவில்நாட்டுக் கிராமத்தலைமைக்காரரின் வளவில்கண்டெடுக்கப்பட்டதாய்ச் சொல்லப்படுகிறது. இதுசம்பந்தமாய் ஆறுபேர்கைதுசெய்யப்பெற்று, 68 ருத்தல்அபினும், புடவைகளும் களவிலே இறக்குமதிசெய்ய முயன்றார்களெனக் குற்றஞ்சாட்டி யாழ்ப்பாணநீதிஸ்தலத்திலே வழக்குத் தொடரப்பட்டிருக்கின்றனர். நீதிபதி ஆறுபேரையும் தனித்தனி ஆயிரம்ரூபா பிணையில்விட்டு வழக்குவிசாரணையை வருகிறமாசிமாதம் 17-ந் திகதிக்குத் தவணைபோட்டனர். இவர்களில்இருவர் தென்னிந்தியாவிலே அன்னபட்டணம், தேய்பால்எனுமிடங்களைச்சேர்ந்தவர்கள்.

### மாணவரும் பவுண்ரன்பேனவும்

பாராளுமன்றத்திலே பாணந்துறைப் பிரதிநிதியான திரு. ரி. சி. டபிள்யு. கன்னங்காரஅவர்கள் 20 வயதுக்குட்பட்ட மாணவரிடையே சமீபத்தில் பேசியபோது, மாணவர்ஒவ்வொருவரிடமும் பவுண்ரன்பேனைவைக்காண்பது பற்றிக் கவலைதெரிவித்துக்கொண்டார். ஆனால், பவுண்ரன்பேனவைத்திராவிட்டால் தாங்கள்வகுப்புகளிலிருந்து வெளியேற்றப்படுவதாக மாணவர்கள் அவருக்குப் பதிலளித்தார்கள். மேலும் அவர் பேசியபோது, இக்காலகல்வியின் போக்கு இப்படித்தான் இருக்கிறது; நான்படித்தகாலத்தில் 'ஜி' நிப்பு அல்லாத பேனவைக் கொண்டுபோனால் வகுப்பைவிட்டுவெளியேற்றப்படுவேன்; பவுண்ரன்பேன கொண்டுபோனால் பிரம்படிதான் கிடைக்கும்; இன்று நமதுஇளைஞர்களின்கையில் பீடி, சிகரெற், அமெரிக்க "கமிக்" புத்தகங்கள், ஆபாசப்படங்கள் போன்றவைகளைத்தான் காணலாம்; இதனை ஆசிரியர்களும், பாடசாலைகளும் ஆட்சேபித்ததாகத் தெரியவில்லை; பவுண்ரன்பேனவை அதிகமாகப்பாவிப்பதால் எழுத்தும் நன்றாயிருப்பதில்லை; இவைகளையெல்லாம் பாராளுமனறத்தில் எடுத்துக்காட்டித் தேசியநன்மைக்காக என்னால் இயன்றதைச் செய்யமுயல்வேன என்றும அவர்கூறினர்.

### ஓட்டுத் தொழிற் சாலை

ஈரக்கமம்என்னுமிடத்திலே கல்லோயாச்சபைஅமைத்த ஓட்டுத்தொழிற்சாலையில் இப்போதுவேலை ஊக்கமாக நடைபெற்றுவருகின்றது. இதில் வருடம்ஒன்றுக்குப் பத்துலட்சம் ஓடுகள் செய்யப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. அம்பாரையிலிருந்து பத்து மைல்தூரத்தில் அமைந்துள்ள இத்தொழிற்சாலையைக் கட்டிமுடிக்கப் பதினைந்துமாதங்கள்வரையில் சென்றன. ஓர்இந்திய ஓட்டுநிபுணரான திரு. ஜே. அய்மோஎன்பவர் தலைமைவகித்து இதனைநடத்துகின்றார். இதன் அழுத்து யந்திரங்கள் இரண்டினுள் ஒவ்வொன்றும் நிமிஷம்ஒன்றுக்குப் 12 ஓடுகள் செய்கின்றன. இதன் "பக்மில்" நாள் ஒன்றுக்கு 5,000 ஓடுகள் செய்யக்கூடியது.

### விடுமுறைபற்றிய பிரேரணை

கிறிஸ்மஸ்விடுமுறை குறைக்கப்பட்டதற்குப்பதிலாக இவ்வருடம் சித்திரைமாதநடுப்பகுதியிலே அரசாங்கஊழியர்களுக்கு இரண்டுவாரத் தொடர்பான விடுமுறைநாட்கள் அருளப்படவேண்டுமெனக்கேட்டுப் பாராளுமன்றத்திலே நிவிற்றிக்கலைப்பிரதிநிதியாய் இருந்து வருகிறவரான திரு. ஹறல்ட் வெரகம அவர்கள் கொண்டுவந்துள்ள ஓர்பிரேரணைபற்றி அரசாங்க பாராளுமன்றக் குழுவின் பிரேரணைக்கம்மிற்றி ஆலோசித்துவருகின்றது.

### கண்டித் தேர்தல் மனு

பாராளுமன்றப் பிரதிநிதிகள்சபையிலே கண்டிநகர்ப் பிரதிநிதியாகத் தெரிவுசெய்யப்பெற்றவரான திரு. ஈ. எல். சேனநாயகஅவர்களின் தேர்தல் முறைகேடானதென ஆட்சேபித்து, அதைத் தள்ளிவைக்குமாறு கேட்டுத் திரு. எச். எம். நவரட்ண, திரு. எச். எஸ். மொலிகொட என்னுமிருவர் சேர்ந்து சுப்பிறீங்கோட்டுக்குச் சமர்ப்பித்தமனு 28 தினங்களாகச் சங். எச். ஏ. டி சில்வாநீதியாசரால் விசாரணை செய்யப்பட்டுச் சென்றவெள்ளிக்கிழமை முடிவடையலாயிற்று. தீர்ப்பு இன்றும் சொல்லப்படவில்லை.

# கத்தோலிக்க சமாச்சாரம்

**ஒல்லாந்தும் மிஷனரிமாரும்**

ஒல்லாந்துதேசம் சுமார் 40 லட்சம் கத்தோலிக்கரைக் கொண்டுள்ளது. ஆனால், தனது மிஷனரிமார்களின் தொகையாலே சகலதேசங்களிலும் முதலாவதுஸ்தானம் வகித்திருக்கின்றது. டச்சுக்காரரான மிஷனரிமார் தொகை எல்லாமாக 7,085. இவர்களில் 3,229 குருமாரும், 1,071 பிறதர்மாரும், 2,534 கன்னியாஸ்திரிமாரும் அடங்குவார்கள். டச்சுக்காரரான ஒவ்வோர் நூறுகத்தோலிக்கரிலும் பன்னிருவர் விசுவாசப்பரப்புதற்சபை அங்கத்தவர்களாயும், ஒவ்வோர் நூறுபிள்ளைகளிலும் 6(0)பேர் திருப்பாலத்துவ சபையைச் சேர்ந்தவர்களாயும் இருக்கின்றார்கள்.

**நாஸிய தலைவரின் புதல்வர்**

ஜேர்மனியிலே ஹிற்லரது ஆட்சிகாலத்தில் அவரதுபதிற்தலைவராயிருந்து யுத்தம் முடிந்ததும் காணாமற்போன பூர்மன் என்பவரின் புதல்வரான மாட்டீன்பூர்மன் திருஇருதய ஆண்டவரின் மிஷனரியகுருமார் சபையில் ஒருவராக வாக்குத்தத்தம் கொடுத்திருக்கின்றார். யுத்தம் முடிந்தபின் இவர் ஓர்கத்தோலிக்கராயினர். இவரைப்பின்பற்றி இவரது நான்குசகோதரிகளும், சகோதரர்களில் இருவரும் கத்தோலிக்கராயினர். கத்தோலிக்க திருமறையில் சேர்ந்துகொண்டபின் மாட்டீன் கனிசியஸ்கலாசாலையில் கல்விபயின்று, 1951-ம் ஆண்டு ஆஸ்திரியாவிலே பெடரோன் எனுமிடத்திலுள்ள நவசந்நியாச மடத்திற் பிரவேசிக்கலாயினர்.

**வேதகலாபனைசெய்த பிரபு**

யப்பானியதேச சென்டாய் எனுமிடத்திலே பதினாறாம் நூற்றாண்டில் ஓர்மானியப்பிரபுவாக விளங்கியிருந்த டேற் மஸாமுனே என்பவரின் பெரியமனையானது விரைவிலே ஓர்கத்தோலிக்க கலாசாலையாக அமைக்கப்படவிருக்கிறது. அப்போது யப்பானிலே உக்கிரவேதகலாபனை உண்டானபோது இந்தப்பிரவு கிறீஸ்துசமயத்தின் மிகப்பெரும்விரோதிகளில் ஒருவராயிருந்து அதிற் கலந்துகொண்டார். ஓர்காலம் இவரின்மனை இருந்துவந்த ஆறு ஏக்கர் கொண்டநிலம் ஓர்உயர்தரகலாசாலையை அமைப்பதற்காக லூர்துவின் சபைக் கன்னியாஸ்திரிமாரால் விலைகொடுத்து வாங்கப்பட்டிருக்கிறது.

**தோமையாரின் நூற்றண்டுவிழா**

அர்ச். தோமையார் பாரத நாட்டில்கால்வைத்த 19-ம் நூற்றாண்டுவிழா சம்பந்தமாய்ப் புதுடில்லியில் நடந்த கொண்டாட்டத்திலே ராஷ்டிரபதி ராஜேந்திரபிரசாத், பிரதமர் பண்டித நேரு முதலாம் பிரமுகர்கள் பெருந்தன்மையுடன் கலந்துகொண்டனர். அவ்வமயம் பண்டித நேரு அவர்கள் பேசியபோது: "இந்தியாவில் தொன்மைவாய்ந்த மதங்களில் கிறீஸ்தவமதம் முக்கியமானது" என்று குறிப்பிட்டார். இந்திய சரித்திரத்தில் கிறீஸ்தவ மதத்திற்குத் தொன்மைஎப்படி உரியதோ அப்படியே கிறீஸ்தவ சமயவரலாற்றில் இந்தியாவுக்குத் தனியிடமுண்டு. இன்று கிறீஸ்தவநாடுகள் என்பப்படுவனவற்றுள் பலர் கிறீஸ்துநாதரை அறியுமுன்னரே இந்தியாவில் அவரை வழிபடத் தொடங்கிவிட்டனர். எவ்வாறெனில், கிறீஸ்துபெருமானுடன் அளவளாவி, அவரது அருள்மொழிகளைக்கேட்டு, அவரின் அன்புப்பணியை நேரில்பார்த்த சீஷர்களில்ஒருவர் கிறீஸ்துசமயத்தை இந்தியாவுக்குக் கொணர்ந்தார். இவர் அர்ச். தோமையாரே. மகமதியர், பார்சியர், ஐரோப்பியர் இந்தியாவில் கால்வைக்குமுன்னரே கிறீஸ்துசமயம் இந்தியாவில் பரவியிருந்தது என்பது சரித்திரவரலாறு. மலையாளத்தில் 19 நூற்றாண்டுகளாகக் கிறீஸ்தவர்களாக வாழ்ந்துவரும் மக்கள் தங்களைத் தோமையாரின் கிறீஸ்தவர்கள்என்று இன்றைக்கும் பெருமையாகஅழைத்துக்கொள்வதே இதற்குச்சான்றாகும்.

**குருபிதாவும் குருபுதல்வரும்**

முன்னர் ஓர்மொத்தவிற்பனவுப் பத்திரிகை வியாபாரியாய் இருந்தவரான வண. பற்றிக் நோட்ரன் அவர்கள் சமீபத்திலேரோமாபுரியில் தமது 69-ம் வயதில் குருத்துவாபிஷேகஞ் செய்யப்பெற்றனர். இவர் ஐக்கிய அமெரிக்கதேச ஐயோவா நாட்டிலுள்ள டுபூக்குவே எனும் தமதுசொந்தநகருக்குத் திரும்பி அங்கு நிறைவேற்றவிருக்கும் முதலாவது பாடற்பூசையின்போது அவரது புதல்வர்களில் ஒருவரான வண. குளோட் நோட்ரன் சுவாமியார் தியாக்கோனாகவும், மற்றொருவரான வண. சாள்ஸ் நோட்ரன்பிறதர் உபதியாக்கோனாகவும் அவருக்கு உதவிபுரிவார்கள். இந்தக்குருபிதாவின் ஏனைய பன்னிரு புத்திரர், புத்திரிகளில் பத்துப்பேர் அவர் நிறைவேற்றும் திவ்விய பூசைக்குச் சமூகமளிக்க விருக்கின்றனர். இவர்கள் புதியகுரவரின் 16 பேரப்பிள்ளைகளையும் கொண்டு செல்வார்கள். வண. பற்றிக் நோட்ரன் சுவாமியார் ரோமாபுரியிலே பாப்பரசரது பெதாகுருமடத்தில் குருப்பட்டத்துக்குப் படித்தார்.

**கம்யூனிஸ்தரும் ஞானஸ்நானமும்**

ஹங்கேரியதேச கம்யூனிஸ்தர்கள் கிறீஸ்துசமயத்தை நிர்மூலமாக்குதற்கான அதிகம்பிந்திய தங்கள் நவீன முயற்சிகளிலே குழந்தைகள் ஞானஸ்நானம் பெறுதிருக்கும்படியான எதிர் இயக்கம் ஒன்றைத் தொடக்கியிருக்கிறார்கள். இந்த இயக்கம் அங்கே நிலக்கரிச்சுரங்கங்களை அடக்கிய பெக்ஸ், ஒஸ்ட்எனும்பகுதிகளில் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. கம்யூனிஸ்த கட்சிக் காரியதரிசிகள் குழந்தைகளைப் பிரசவிக்கவிருக்கும் தாய்மாரிடம்சென்று, புதியதாகப் பிறக்கும் குழந்தைக்கு ஞானஸ்நானம் அருளப்படமாட்டாதென்று வாக்குறுதி செய்து ஓர்வாக்குறுதிப்பத்திரத்தில் கையொப்பம் வைக்கும்படியும் அவர்களைத் தூண்டிவசப்படுத்த வெகுவாகப்பாடுபடுகின்றார்கள். "கையொப்பம் வைத்தால் தாய்மாருக்கு வெகுமானம் அளிக்கப்படும்; அவர்கள்மறுத்தால் பழிவாங்கப் படமாட்டாது" என்று அவர்கள் நயவசனங்கூறி அவர்களைத்தூண்டிவசப்படுத்துகின்றார்கள்.

# திருச்சபை ஐக்கியவாரம்

திருச்சபை ஐக்கியவாரம் என்பது ஓர் அரிய பக்திமுயற்சியாகும். கத்தோலிக்க திருச்சபையைவிட்டுப் பிரிந்துபோயிருக்கும் பிரிவினைச் சபையார், புறொட்டஸ்தாந்த சபையார் முதலாம் கிறீஸ்தவர்கள் திரும்பவும் கத்தோலிக்க திருச்சபையின் ஐக்கியத்தில்வந்துசேர்ந்து வாழவேண்டுமென்பதே இந்தப்பக்தி முயற்சியின் நோக்கம். அங்கிளிக்கன் புறொட்டஸ்தாந்தசபையில் 'உயர்ந்த சபை' (High Church)என்ற ஓர் வகுப்பு உண்டு. இவ்வகுப்பைச் சேர்ந்தவர்கள் கத்தோலிக்க திருச்சபையின் சட்டதிட்டங்கள், சடங்குஆராதனைமுறைகள் முதலியவற்றுள் சிலவற்றைப் பின்பற்றி அனுசரித்துவருகிறார்கள். இந்தவகுப்பில் சந்நியாச சபைகளும் உண்டு. ஐக்கிய அமெரிக்கதேசத்தில் "பரிகாரச் சபைத் துறவிகள்" என்னப்பட்ட ஒருசிறு கோஷ்டி இருந்தது. இக்கோஷ்டியைச் சேர்ந்தவர்கள் எல்லோரும் அங்கிளிக்கன் புறொட்டஸ்தாந்த உயர்ந்த சபையின் அங்கத்தினர். பிரிந்துபோன சபைகள்எல்லாம் ஒன்றுசேர்ந்து ஒரேஆயனும், ஒரேமந்தையுமாக இருக்க வேண்டுமென்பதே இவர்களுடையஆவல். இந்தஆவலைப் பூர்த்திசெய்யுமாறு தேவஅனுக்கிரகத்தைத் தினந்தோறும் இரந்துமன்றாடுவதே இவர்களின்வழக்கம். விசேஷமாய்த் தைமாதம் 18-ந்திகதி அர்ச். இராயப்பர் பத்திராசனத் திருநாள் முதல் 25-ந்திகதி அர்ச். சின்னப்பர் மனந்திரும்பின திருநாள்வரையில் ஒவ்வொரு தினமும் இந்தக்கருத்துக்காக மிகுந்தபக்தியுடன் இவர்கள்மன்றாடிவந்தார்கள்.

இந்தமன்றாட்டை நமது திவ்வியஇரட்சகர் தயவாய்க் கேட்டருளச்சித்தமானார். இந்தப் புறொட்டஸ்தாந்த பரிகாரச் சபைத் துறவிகள் அனைவரும் கிறீஸ்துநாதரின் மெய்யான திருச்சபை எதுவென்று கண்டுபிடிக்கும் அரியவரம் பெற்றார்கள். கத்தோலிக்க திருச்சபையின் ஐக்கியத்தில் வந்துசேரும் ஒப்பற்றபாக்கியம் அவர்களுக்குக்கிடைத்தது. இவர்கள் கத்தோலிக்கர் ஆனபிறகும் ஐக்கியவாரப் பக்திமுயற்சியைத் தொடர்ந்துசெய்து, இன்னும் பிரிந்துபோன மற்றச்சகோதரர்களும் தங்களைப்போல் சத்தியதிருச்சபையின் ஐக்கியத்தில் வந்துசேரவேண்டுமென வேண்டிக்கொண்டுவந்தார்கள். இப்பக்திமுயற்சி பாப்பாண்டவரின் அங்கீகாரம்பெற்று உலகமுழுவதும் வருடந்தோறும் நடைபெற்று வருகிறது. பிரிவினைச்சபைகளிலும், புறொட்டஸ்தாந்த சபைகளிலுமுள்ள நமது சகோதரர்களை நமது திவ்வியஇரட்சகர் தமது ஏகதிருச்சபையின் ஐக்கியத்தில்கொண்டுவந்துசேர்க்கும்படி கத்தோலிக்கமக்களாகிய நாமெல்லோரும் இந்தஐக்கியவாரத்தில் நமது செபதபங்களைத் திருஇருதய ஆண்டவருக்கு ஒப்புக்கொடுப்போமாக.

தைமாதம் 31-ந்திகதியன்று நமது பரிசுத்த தந்தையவர்கள் வானொலிமூலம். இந்தியமக்களுக்கு அனுப்பியசெய்தியிலே இதைப்பற்றிக் கூறியவார்த்தைகளும் ஈண்டுகுறிப்பிடற்பாலன: "தீமையின் சக்திகள் நெக்குவிடாத அணியாக நெருங்கிக் கூடித்தாக்கும் இக்காலத்திலே—கடவுள்பக்கமாக இருப்போரிடையே ஒற்றுமை அத்தியாவசியமாகவிருக்கும் இக்காலத்திலே பிரிந்துபோயிருக்கும் சகோதரர்களையும் மீண்டும்நம்முடன் ஐக்கியமாகும்படியாய் அழைக்கத் துணிகிறோம். பிரிவினைக்கு முற்றுப்புள்ளிவையுங்கள். இராயப்பர் என்னும் இராயின்மேலும், அவருடைய சந்ததியார்மேலும் ஆண்டவர் கட்டியிருப்பதும், அழுத்தந்திருத்தமான வார்த்தைகளில் (மத். 16: 16—20) குறிக்கப்பட்டிருப்பதுமான வீடு உங்களுக்காகத் திறந்தேவைக்கப்பட்டிருக்கிறது. பெரியகுருவாகிய யேசுக்கிறீஸ்துநாதர் விடுத்த உருக்கமான வேண்டுகோளாகிய 'பிதாவே, நீர் எனக்குத் தந்தருளினவர்கள் நம்மைப்போல ஒன்றாயிருக்கும்பொருட்டு உமதுநாமத்தில் அவர்களைக் காப்பாற்றியருளும்' (அருளப்பர், 17: 11) என்ற வார்த்தைகளுக்கு நீங்கள் செவிசாய்த்தருளுங்கள்."

### அர்ச். பிரான்சீஸ்துவின்

## மூன்றாஞ் சபை

அர்ச். பிரான்சிஸ்குவின் மூன்றாஞ் சபை மாதாந்தக்கூட்டம் இம்மாதம் 30-ந் தேதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 5 மணிக்கு அர்ச். சூசையப்பர் சிற்றாலயத்தில் நடைபெறும். அக்கூட்டம் மூன்றுவருடங்களுக்கு ஒருமுறை உத்தியோகஸ்தரைத் தெரிவுசெய்யும் நோக்கமாய்க் கூட்டப்படும். பொதுச் சங்கமாயிருப்பதால் அங்கத்தவர்கள் விசேஷமாய் வார்த்தைப்பாடு எடுத்தவர்கள் ஒருவர்தப்பாமல் நேரத்தோடு சமூகங்கொடுக்கும்படி வெகு வினயமாய்க் கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள். மாசிமாதம் பரிபூரணபலன் அடையக்கூடியநாட்கள்:— 1, 2, 4, 5, 14, 19, 22, 25. பொதுப்பாவமன்னிப்பு அடையக்கூடியநாள் 2-ம் தேதி.

A. S. FRANCIS OF MARY
for Director

## தைமாதம்

சேப அப்போஸ்தல சபையின் போதுக்கருத்து: தவறிப்போன யாவரும் நேர்மையான கருத்தோடு யேசுக்கிறீஸ்துநாதரின் திருச்சபையைத்தேடி அடையும்படியாக வேண்டிக்கொள்வது.

மிஷன்கருத்து: திருப்பாலர் சபைக்காக மன்றாடுவது.

## திருநாள் அட்டவணை

தைமாதம் — 1953

| | | | |
|---|---|---|---|
| வெ | 23 | அ. இரேமுந்தப்பர், து. | (வெ) |
| சனி | 24 | அ. திமொத்தேயு, மே. வே. | (சி) |
| ஞா | 25 | கர்த்தர் பிரத்தியட்சத்தின்பின் 3-ம் ஞாயிறு— அ. சின்னப்பர் மனந்திரும்பின திருநாள் | (ப) |
| திங் | 26 | அ. பொலிக்கார்ப்பியார், மே வே. | (சி) |
| செ | 27 | அ. கிறிசோஸ்தொம் அருளப்பர், மே. | (வெ) |
| புத | 28 | அ. நொலாஸ்குஸ் இராயப்பர், து. | (வெ) |
| வி | 29 | அ. பிரான்சீஸ்கு சலேசியார், மே. | (வெ) |

சத்தியவேத
பாதுகாவலன்
1953-ம் ஆண்டு
தைமாதம் 22-ந் திகதி

## பீதியுத்தம் இறுதிகாணுமா?

சனநாயக நாடுகளிலாயினுஞ்சரி, சர்வாதிகார நாடுகளிலாயினுஞ்சரி, மக்கள் இன்று ஆசித்துத்தேடுவது உலகசமாதானமே. யுத்தபீதியோ, சோவியற் அரசின் சூதுவாதான பீதியுத்தமோ ஒழிந்து உலகில் அமைதி தோன்றவேண்டுமென்பதே மக்களின் பொதுவான வேண்டுகோளாகும். இந்த நிலைமையிலே இப்புத்தாண்டு பிறந்தது. அப்போது பல்வேறுநாடுகளின் அரசியல்வாதிகளும், மற்றும் அறிவாளிகளும் இவ்வாண்டில் நிகழக்கூடியவைகளை ஒருவாறு அனுமானித்துக் கூறினார்கள். ஆனால், அவர்களின் கூற்றுகள் ஒன்றுக்கொன்று முரண்பாடுடையனவாகவேயிருந்தன. 1953-ம் ஆண்டானது கோரியாவிலும், மலாயாவிலும், வியெற்னமிலும் இரத்தப்பிரவாகத்தின் இறுதியைக்காணும்; ஓர் சுதந்திர— ஐக்கிய கோரியாவும், சுயஆட்சிபெறும் மலாயாவும், சுதந்திர வியெற்னமும் ஸ்தாபகமாவதைக்காணும்; அம்மட்டா! உண்மையான சமாதானத்தையும், அரசுகள் நிராயுதபாணிகளாவதையம், அணுக்குண்டுகள், சலவாயுக்குண்டுகள், மன்பதைகளை மாபெருங் கூட்டமாகக் கொன்றழிக்கும் பிற பயங்கர ஆயுதங்கள் விலக்காவதையும், சர்வதேச பொருளாதார—கலாசாரத் தொடர்புகள் விசாலமடைவதையும் காணும் என்பனவாக ஒருசிலர் நம்பிக்கை தெரிவித்தனர். இவ்வாறெல்லாங் கைகூடுமிடத்து இந்த ஆண்டு பெரும்பாக்கியமான தொன்றாய்—சரித்திரப்பெருமை வாய்ந்ததொன்றாய் இருக்குமெனச் சொல்ல வேண்டியதில்லை.

ஆனால், சமாதானத்தின் சென்மசத்துருவாய், உலகை மீளவும் அடிமைத்தளையில் பிணித்துவிடுவான் அடிகோலிக்கொண்டு வருவதாய், சர்வாதிகாரக் கொடுங்கோலாட்சி நடாத்திவருகின்ற ருஷிய சோவியற்அரசோ இத்தகைய ஓர் சுத்தமான நம்பிக்கையை எதிர்பார்க்குமென்று நம்ப இடமேயில்லை. கோறிய யுத்தத்துக்கு முடிவுகட்டுவதில் தான் கரிசனை கொண்டுள்ளாரென்று ருஷிய சர்வாதிகாரியான மாஷல் ஸ்ராலின் சமீபத்தில் கூறியபோது அவர் சுத்தமனத்துடன் அவ்வாறுசொன்னாரென்று எண்ண இடமேயில்லை. ஏனெனில், அவர் கோறியயுத்தத்துக்கு முடிவுகட்டுவதில் உள்ளபடியே கரிசனை கொண்டுள்ளாராயின் அங்கு யுத்தநிறுத்த முட்டுக்கட்டையை முடிவு கட்டுவதற்காக இந்தியா கொண்டுவந்த பிரேரணைகளுக்குச் சாதகமாக நின்றிருப்பார் அன்றோ! ஆதலால் சுதந்திர உலகத்துக்குச் சோவியற்அரசின் பயமுறுத்தல் நீங்கும்போல் இல்லை. அதனால் ஸ்ராலினும், மற்றும் சோவியற் ஆட்சித் தலைவர்களும் கம்யூனிஸ்த உலக ஆதிக்கத்தையே தங்கள் ஈறுந்த குறிக்கோளாகக் கொண்டு செயலாற்றி வருகின்றார்கள். எந்தநாடும் சமாதானமாய் வாழ்வதென்றால் அவர்கள் மனஞ்சகிக்கமாட்டார்கள். கல்லடிசிற்பன் போனவழி காடுமேடெல்லாம் தவிடுபொடி என்றவாறாய்க் கம்யூனிஸ்தர்கள் கால்வைக்குமிடமெல்லாம் கலகங்களும், சதிமானச்செயல்களும், சமயநிஷ்டூரங்களும் கொலைபாதகங்களும், பலவித அட்டூழியங்களுமே தலைவிரித்தாடுகின்றன.

இத்தகைய ஓர் நிலைமையிலே கம்யூனிஸத்தின் பரமசத்துருவும், சனநாயகத்திற்குத் தலைமைதாங்கிநிற்பதுமான ஐக்கிய அமெரிக்கதேசத்தின் ஜனாதிபதியாகக் கடந்த ஏழுவருடகாலமாய் விளங்கியிருந்த திரு. ஹரிட்றூமன் அவர்கள் சென்ற 20-ந்திகதி செவ்வாயன்று தமது பதவியிலிருந்து விலக, அவரிடமாகப் புதிய பிரசாதிபதியாகப் பிரதாபமிக்க சேனாதிபதியான ஜெனறல் ஐஸன் ஹாவர் அவர்கள் விசுவாசப்பிரமாணஞ் செய்து பதவியேற்றிருக்கின்றார். சனநாயகத்துக்குப்பாரிய அரண்களில் ஒன்றாகப் பிரஸ்தாபம்பெற்றிருந்த திரு. ட்றூமன் அவர்கள் தம் பதவியில் இருந்து விலகும்போது விடுத்த பிரியாவிடைச்செய்தியிலே தெரிவித்திருப்பதானது இன்று கம்யூனிஸத்தால் கலவரங்கொண்டு வாழும் உலகமக்களுக்குப் பெரிதும் உற்சாகம் அளிப்பதாகும். அதாவது: "அரசியற்புரட்சியாலோ, அன்றேல் கூட்டுநாடுகளில்ஏற்படுஞ் சங்கடங்களாலோ, ருஷிய அதிகாரபீடமாகிய கிறெம்லினில் ஏற்படும் ஓர்மாற்றத்தாலோ, அன்றேல் பிறவழிவகைகளாலோ சோவியற் உலகத்தில் ஏற்படும் ஓர் மாற்றத்துடன் பீதியுத்தம் இறுதியடையும்" என்பதே. அங்ஙனமாக, அவரிடமாகவந்த புதியஜனாதிபதியான ஜெனறல் ஐஸன் ஹாவர் அவர்கள் அதிகாரபதவியைக் கையேற்றுப்பேசியவிடத்து: "தேசங்களிடையே அச்சத்தையும், அவநம்பிக்கையையும் அகற்றுவதற்காக எடுத்துக்கொள்ளப்படும் நேர்மையான முயற்சியிலே எல்லோருடனுஞ்சேர்ந்து ஒத்துழைப்பதாக உறுதிவாக்களிக்கிறேன்; ஆனால், போலிப்பொருத்தனை ஒன்றால் ஆக்கிரமிப்பாளன் ஒருவனை நான்ஒருபோதுமே திருப்திப்படுத்த மாட்டேன்" என்று உத்தண்டத்துடன் கூறியிருக்கின்றார். தாம் ஜனாதிபதியாகத் தெரியப்பட்டபின் ஜெனறல் ஐஸன் ஹாவர் எடுத்துவரும் முயற்சிகளையும், வகுத்துவரும் திட்டங்களையும் ஆராய்வாகக் கவனிக்குமிடத்து, அவர் சோவியற்அரசின் தந்திர சூழ்ச்சிகளுக்கும், சுதந்திர ஆக்கிரமிப்புகளுக்கும் தமது காலத்தில் ஓர் முடிவு காணுவாரெனவே நம்பியிருக்கலாம்.

1953-ம் ஆண்டுக்கான
இலங்கைச் சத்தியவேத
பஞ்சாங்கம்
Manager
St. Joseph's Catholic Press,
Jaffna

## கர்த்தர் பிரத்தியட்சத்தின் 3-ம் ஞாயிறு

சுவிசேஷ வாசிப்பு
(மத். 8: 1—43)

அர்ச். மத்தேயு எழுதிவைத்தபடி பரிசுத்த சுவிசேஷத்தின் தொடர்ச்சி:— அந்தக்காலத்திலே யேசுநாதர்மலையில்நின்று இறங்கினபோது, திரளான சனங்கள் அவர் பின்னாலே போனார்கள். அப்போது, இதோ! ஒரு குஷ்டரோகிவந்து அவரை நமஸ்கரித்து: ஆண்டவரே, தேவரீருக்குச் சித்தமானால் என்னைச் சுத்தமாக்க உம்மால் கூடுமென்றான். அப்போது யேசுநாதர் தமதுகரத்தை நீட்டி அவனைத்தொட்டு: சித்தமாயிருக்கிறேன், சுத்தமாகு என்றார். உடனே அவனுடைய குஷ்டரோகம் சுத்தமாயிற்று. யேசுநாதர் அவனை நோக்கி: இதை நீ ஒருவருக்கும் சொல்லாதபடி பார்த்துக்கொள். ஆயினும்போய், குருப்பிரசாதிக்கு உன்னைக்காண்பித்து, அவர்களுக்கு அத்தாட்சியாக மோசேசுகட்டளையிட்ட காணிக்கையைச் செலுத்து என்றார். பின்பு அவர் கப்பர்னாவும் ஊரில் பிரவேசித்தபோது, நூற்றுக்கு அதிபதிஒருவன் அவரிடத்திலே வந்து அவரைமன்றாடி: ஆண்டவரே, என்ஊழியன் திமிர்வாதமாய் வீட்டிலேகிடந்து அகோரவாதைப்படுகிறான் என்றான். அதற்கு யேசுநாதர்: நான்வந்து அவனைக் குணமாக்குவேன் என்றார். அப்பொழுது நூற்றுக்கதிபதி மறுமொழியாக: ஆண்டவரே, தேவரீர் என் இல்லத்தில் பிரவேசிக்க அடியேன் பேறுபெற்றவனல்ல. ஆனால், தேவரீர் ஒரு வார்த்தை மாத்திரஞ் சொல்லியருளும், என்ஊழியன் சொஸ்தமடைவான். ஏனெனில், அடியேனும் அதிகாரத்துக்குக் கீழ்ப்பட்ட மனிதனாயிருக்கிறேன். எனக்குக் கீழ்ப்பட்டிருக்கிற போர்ச் சேவகரும் உண்டு. நான் (அவர்களில்) ஒருவனைநோக்கி: போ, எனப் போகிறான்: வேறொருவனை நோக்கி: வா, என வருகிறான்; என்ஊழியனையும் இதைச் செய்யென, செய்கிறான் என்றான். யேசுநாதர் இதைக்கேட்டு அதிசயித்து, தமதுபிறகே வருகிறவர்களை நோக்கி: நான் இசிறவேலரிடத்தில் இம்மாத்திரம் விசுவாசத்தைக் காணவில்லையென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். ஆகையால், அநேகர் கிழக்கிலும் மேற்கிலுமிருந்துவந்து, பரலோக இராச்சியத்தில் ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு என்பவர்களோடு கூடப் பந்தியில் அமருவார்களென்று உங்களுக்குச் சொல்லுகிறேன். இராச்சியத்தின் மக்களோ புறம்பான இருளிலே தள்ளப்படுவார்கள்; அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கும் என்று திருவுளம்பற்றினார். பின்னும் யேசுநாதர் நூற்றுக்கதிபதியை நோக்கி: நீ போகலாம்; நீ விசுவசித்தபடியே உனக்கு ஆகக்கடவது என்றார். அந்நேரமே அந்த ஊழியன் சௌக்கியமடைந்தான்.

கிறீஸ்துவே, உமக்குப் புகழ் உண்டாவதாக

## இந்தியகத்தோலிக்கரும் புதிய இந்தியாவும்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நானூறு வருடங்களிலும் இந்தியாவில் மிஷனரியவேலை அபிவிருத்தியடைந்து வந்துள்ளது.

இந்தியகத்தோலிக்கமக்கள் இவ்விரு அப்போஸ்தலர்களையும் இத்துணை ஆடம்பரத்துடனும், பக்திசிரவணத்துடனும் இதற்குமுன் எப்பொழுதேனும் கொண்டாடினார்களா என்பதை நாம் அறியோம். ஆனால், ஒரு விஷயத்தைப்பற்றி நாம்நிச்சயமாகச் சொல்லக்கூடும். அதாவது, உங்களுக்கும், உங்கள் நாட்டிற்கும் மிகவும்மகத்தான காலமாகிய இதுபோன்ற ஒருசந்தர்ப்பத்தில் அத்தகைய கொண்டாட்டம் நடைபெற்றதில்லை என்பது தெளிவு. சமீபத்திலே கடந்துபோன வருடங்களில் இந்தியா தனது சரித்திரத்திலேயே ஒரு புதியகட்டத்தில் நுழைந்துள்ளது. புதிதாகஉருவாகும் தேசிய அமைப்பிற்கு அஸ்திவாரம் நாட்டுவதில் இந்தியா தனது மக்களில் திறமையும் நேர்மையுமுள்ள எல்லாப்பேர்களுடையவும் ஒத்துழைப்பை நம்பியிருத்தல் வேண்டும். இவர்களிடமிருந்து அந்தஒத்துழைப்பைக் கோர இந்தியாவுக்கு உரிமையுண்டு. நன்மையின் சக்திகளும், தீமையின்சக்திகளும் ஆசியாவின் ஆத்துமாவைக் கைப்பற்றுவதற்காகக் கடும் போர்புரிந்து வருகின்றன. இந்தபோரின்முடிவு எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததுஎன்பதை நாம் உங்களுக்கு எடுத்துக்

கூறவும் வேண்டுமா! இந்தப் போரில் நன்மையின் சக்திகள் எவ்வளவு பொறுப்புணர்ச்சியுடனும், எவ்வளவு பலமாகவும், எத்தகைய விடாமுயற்சியுடனும் போர்நடத்திவர வேண்டும் என்பதையும் நீங்கள் உணர்ந்திருப்பீர்கள். ஒரு புதியநாட்டை உருவாக்குவதில்மதம்—உண்மையானமதம் எவ்வளவு முக்கியமானபங்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதையும் நீங்கள் உணர்ந்திருப்பீர்கள்.

(தொடரும்)

## சுத்தமான உணவே மிகச் சிறந்தது

உலகில்வாழும் மக்கள் அனைவரும் உண்பதற்காக வாழவில்லை; வாழ்வதற்காகவே உணவு உட்கொள்ளுகிறோம் எனக் கருதவேண்டும். தவிர, நாம் உண்ணும் உணவைப்பொறுத்தே நமதுஉடல் ஆரோக்கியமாக இருக்குமென்பதை உடலின்நிலையை அறிந்த எவரும் மறுக்கமுடியாது. நாம்செய்யும் ஒவ்வொருவேலையாலும் நமது அவயவங்கள் களைப்படைந்து தேய்ந்து மெலிவடைகின்றன. அவயவங்களின் களைப்பைநீக்கி அவற்றிற்கு வலிமை அளிக்கவேண்டும். அவற்றைப் போஷிக்கவேண்டும். அதற்காகவே நாம் ஆகாரம் சாப்பிடவேண்டியிருக்கிறது.

நமது உடலானது வேலைசெய்யும் ஒருநீராவி எஞ்ஜின்போன்றது. எஞ்ஜினில் ஒருபக்கத்தில் நெருப்புஎரிவதனால் அந்தயந்திரம் உஷ்ணமாகி வேலைசெய்யும்சக்தியைப் பெற்றிருக்கிறது. யந்திரத்தில் சூடுஉண்டாக்க நிலக்கரியோ, விறகோபோட்டு எரிக்கிறார்கள். அதுபோலவே நாம்உண்ணும்உணவும், உள்ளேசுவாசிக்கும் காற்றும் நமது சரீரத்துக்கு உஷ்ணத்தைஉண்டாக்கி உயிர்வாழும்சக்தியைப் பெருக்குகின்றன. உஷ்ணத்தைஉண்டாக்கி, உண்ணும் உணவைச் சீரணமாக்கி உடலுக்குவேண்டிய சத்துகளையும், அதனால்வலிமையையும் தருகின்றன. வேலைசெய்வதால் கழிவுஏற்படுகிறது. அதைமீளவும்நிரப்பவே உணவு உட்கொள்ளுகிறோம். உணவு செரித்த பிறகு அதன்சத்துகளை இரத்தம் சுமந்துசெல்லுகின்றது. அந்தஇரத்தம் உடலில் பலபாகங்களுக்கும் சென்று சத்துகளைஊட்டுகிறது. அதனால் உடம்பு நாளுக்குநாள் வளர்ச்சி அடைகிறது.

நமதுஉடல் வளர்ச்சிஅடைய நல்ல உணவுவேண்டும். உண்ணும்பொருள்களில் எப்படிப்பட்டசத்துகள் இருக்கின்றனஎன்பதைப்பற்றித் தெரிந்துகொள்ளவேண்டும். சத்து இல்லாத உணவை உட்கொள்வதால் வலுவிழந்து உடல்மெலிந்து நோய்உண்டாகிறது. நாம்உண்ணும் ஒவ்வொரு உணவுப்பொருளிலும் அநேகசத்துகள் உண்டு. இந்தச்சத்துகளைத்தான் ஆங்கிலத்தில் 'விற்றமின்'என்று சொல்லுகிறார்கள். விற்றமின் இல்லாதஉணவு எவ்வளவுஉட்கொண்டாலும் விழலுக்கு இறைத்தநீர்போல் உடலுக்கு எவ்வித பலனும் கிடைக்காது.

உலகமக்களில் பாதிக்குமேல் அரிசியையே தங்கள்முக்கியஉணவாகக் கொள்ளுகிறார்கள். நமது நாட்டில் கிடைக்கும் இதரதானியங்களில் அதிகசத்துகள் கிடைத்தபோதிலும் அரிசியே உணவிற்குமிகச் சிறந்தது. அதிலும் பச்சரிசியைவிடப் புழுங்கல்அரிசியே மிகமிகச்சிறந்தது. சுலபமாகச் சீரணிக்கக்கூடியது. உடல்வளர்ச்சிக்குரிய சதைகள்உண்டாவதற்கு இன்றியமையாத 'அமினோ அஸிட்' என்ற சத்துப்பொருள் அதிலேகிடைக்கிறது. கிடைக்கும் சத்துப்பொருள் அனைத்தும் அரிசியின்தவிட்டிலும், அதன் முனையிலும்தான் இருக்கின்றன. இந்த உண்மையை அறியாமல் நெல்லை மில்லில் குற்றுவதாலும், 'பொலிஷ் போடுவதுபோல நன்றாகத் தீட்டுவதாலும், சாதம்சமைக்கும்போது அதிக தண்ணீர்விட்டு வடிப்பதாலும் அதன்சத்துகளை இழந்துவிடுகிறோம்.

அரிசியை ஒருமுறை தீட்டுவதினால் அதன்சத்தில் 55வீதம் நஷ்டமாகிறது. இருமுறைதீட்டுவதினால் 75 சதவிகிதமும், மும்முறைதீட்டுவதினால் 82 சதவிகிதமும் நஷ்டமாகிறது. தீட்டிய அரிசியில் அதிகதண்ணீர்விட்டுச் சாதத்தைவடிப்பதனால் மீதமுள்ள 18 சதவிகிதமும் நீக்கப்பட்டுச் சத்துகள்அனைத்தையும் ஆடுகளுக்கும் மாடுகளுக்கும் கொடுத்துவிட்டு, அவைகளைவிட அறிவில்சிறந்தவர்களெனப் பெருமைப்படும் மனிதர்களாகியநாம் சத்தே இல்லாத வெறும்சக்கையை உணவென நினைத்து உடலினுள் திணிக்கிறோம். அதனால் உண்டாகும் அசீரணம், மலச்சிக்கல், வயிற்றுவலி, தலைவலி முதலிய வலிகளுடன் அவஸ்தைப்படுகிறோம்.

இவைகளை அகற்றுவதற்கு அரிசியைத்தீட்டுவதையும், அதிகதண்ணீர் விட்டு வடிப்பதையும் நிறுத்தவேண்டும். தவிர, யந்திரத்தில்குற்றிய அரிசிச்சாதத்தை உண்பவர்கள் இழந்துபோனசத்துகளை ஈடுசெய்வதற்காக உணவுஉண்ணும்போது அரைவீசம்படிஅளவு பச்சரிசியையும் தீட்டிய தவிட்டையும்சேர்த்து உண்ணவேண்டும். உணவுதயார்செய்வதில் மிகக் காரமுள்ள மிளகாய் கடுகு இவைகளை அதிகமாகச்சேர்க்கக்கூடாது. இதனால் வயிற்றுக்குக் கோளாறுகள் ஏற்படும். புளி, பெருங்காயம், சோடாஉப்பு இவைகளைச்சேர்ப்பதால் உணவில் கிடைக்கும்சத்துகள் கெட்டுவிடுகின்றன. ஆதலால் மிளகாய், கடுகு, புளி, பெருங்காயம் இவைகளை அதிகமாகச் சேர்க்கும் பழக்கமுள்ளவர்கள் வரவரக் குறைத்துக்கொண்டு அதற்குப்பதில் மிளகு, எலுமிச்சம்பழம், இஞ்சிஇவைகளை மிதமாகச் சேர்த்துக்கொள்ளலாம். நாவுக்குருசி குறைந்திடினும் வீட்டில்செய்யும் சுத்தமானஉணவே மிகச்சிறந்தது.

—"ஆரோக்கிய சக்தி"

## மாதோட்டத் தபால்

(நாட்டுத்தூதன்)

ஐயா! கட்டுக்கரைக் குளத்தை உற்றுநோக்கக் கண்ணீர்த் துளிகள் தானாகவே சொட்டுகின்றனவாம். இவ்வித கவலைக்குக்காரணம் அக்குளத்தினுள் தண்ணீர் இல்லாமைதானும். இந்நாட்டின் இரத்தாசயமாகிய இத்தடாகத்தின்கதி இப்படியாயின் நாட்டுமக்களின் கதியையிட்டு நவிலவும் வேண்டுமா? இருப்புநெல் வைத்திருக்கும்செல்வர் இம்முறைஅடையப் போகும் ஆதாயத்திற்கு அளவேயில்லையாம். ஏழைகள் அனுபவிக்கப்போகும் பெருங்கஷ்டத்திற்கும் அளவேயில்லையாம். ஏழைஉழவர்களே! இனியாவது உங்கள்கண்களைத் திறந்துபார்த்து நன்கு யோசிப்பீர்களா? மைலுக்குப் பத்தாகப் பாந்துகாணப்படும் வானொலிக்கருவிகளின் கானத்தில்மயங்கி நம்நாட்டின் உயிர்நாடியாகிய கட்டுக்கரைக் குளத்தின் திருத்தவிருத்தியைக் கருதாது கண்களை இறுகமூடிக்கொண்டு, சில போலித்தொண்டர்களின் புருடாப்பேச்சுகளுக்குச் செவிசாய்த்து அப்போதுகடந்துகொண்டதால் வந்தபலாபலனை இப்போது நேரில் கண்டுகொண்டீர்களா? ஆகாயவசனிகள்தானா வயிற்றுக்கு ஆகாரந்தரப்போகின்றன. நமதுகட்டுக்கரைக்குளம் போதியளவுஆழமாகத் திருத்திஅமைக்கப்படின் கூடுதலான நீரைக்கொண்டு நாம் கஷ்டப்பட்டுச்செய்த வேளாண்மையில் அரைவாசியையோ, அன்றேல் கால்வாசியையோ தடையின்றி விளைவித்துப் பலன்பெற்றிருக்கலாமே.

ஏமாற்றப் பேச்சு:— சென்ற வைகாசிமாதம் பாராளுமன்றத் தேர்தல்நடைபெற்றபோது அடம்பன் அரசினர் வைத்திய சாலைக்கு இதோ! அடுத்தமுதல்தேதி, அதோ! அடுத்த 15-ந்தேதி ஒருபிரதமடக்றர் வரப்போகின்றாராம், அதுவும் டக்றர்கார்த்திகேசாம்; இல்லை, இல்லை, டக்றர் கதிர்காமராம் என்பனவான பேச்சுக்கள் இப்பகுதியின் எண்திசையும் பேரிரைச்சலாக எழுந்தனவாம். ஆனால், தேர்தல்முடிந்து அம்மம்மா! எட்டு மாதங்கள்ஆகியும் இன்னுமே டக்றர் கார்த்திகேசையாவது, கதிர்காமரையாவது, அல்லதுவேறெந்த டக்றர் ஒருவரையாவது கண்ணைப்படைத்தும் காணவில்லையாம். பழையஅப்போதிக்கரி மாறிப்போய்விட மீண்டும்ஓர்அப்போதிக்கரி தோன்றிஇருப்பதுதான் கண்டமிச்சமாம்.

ஆருக்குத் தோல்வி:— மன்னார்ப் பட்டினசங்கத் தேர்தலிலே இம்முறை இருதமிழ் ஆசிரியர்கள் போட்டியிட்டனராம். அவர்களுக்குத் தோல்வியில்லையாம். ஆனால், மலேரியாவை உண்டாக்கும் நுளம்புப்படைகளுக்கும் மலேரியாத் தடைப்பகுதிப் படைகளுக்குமிடையே நடந்துவரும்போட்டியில் தடைப்பகுதியாரின் படைகளே தோல்வியடைகின்றனவெனச் சொல்லவேண்டியிருக்கிறதாம். ஏனெனில், நுளம்புக்கடியின் உபத்திரவம் பொறுக்கமுடியாமல் இருக்கிறதாம். அடம்பன் ஆஸ்பத்திரிக்கு அருகாமையில்தானும் நுளம்புப்படைகள் பாளையமடித்திருக்கின்றனவாம். இவ்வித துணிகரமான செயலுக்குக் காரணம் அந்தஆஸ்பத்திரியில் இன்னுமே ஒரு பிரதமடக்றர் நியமிக்கப்படாமைதானும்.

வருகின்றார்:— இம்மாசம் 30-ந்திகதி நமதுகவனர்-ஜெனறல் சோல்பரிபிரபு மன்னாருக்கு அதிகாரதோரணையிலே விஜயஞ்செய்ய வரப்போகின்றாராம். அவரைத் தக்கமுறையாக வரவேற்பதற்குரிய ஆயத்தமெல்லாம் விமரிசையாக நடைபெற்றுவருகிறதாம். இதனையொட்டி 30-ம், 31-ம், மாசி 1-ம்திகதிகளில் பொருட்காட்சிகளும் நடந்தேறுமாம். இவற்றைப் பார்வையிடச் சகலபாடசாலைமாணவர்களும் அழைக்கப்படுகின்றனராம். இந்த மகிழ்ச்சிக்குரிய செய்தியைக் கேட்டுநின்ற ஏழை உழவன்ஒருவன் சோல்பரிபிரபுவந்தால் பாழாய்ப்போகும் எங்கள்வேளாண்மைக்கு ஒருமுறைத்தண்ணீராவது கிடைக்குமா என்று கவலையுடன் சொல்லிக்கொண்டானும்.

சுபம்!

## இந்திய புதிய கருதினல்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

எனது அரசாங்கத்தின் சார்பாகவும் மனப்பூர்வமான சோபனவாழ்த்துகளைச் சமர்ப்பிக்கிறேன்" என்பதுவே. பிந்த ஜனாப் அசாவ் அலி அவர்கள் வியாழக்கிழமை நடந்தேறிய பகிரங்க கருதினல்மார் திருச்சங்கக் கூட்டத்துக்குச் சமுகமளித்து, புதிய இந்திய கருதினலாண்டவரைக் கௌரவிக்குமுகமாக ஓர் வரவேற்பு உபசரணை நடத்தலாயினர்.

### கவர்னர்—ஜெனறலின் விஜயம்

கவர்னர்—ஜெனறல் சோல்பரிபிரபு அவர்கள் தமதுபரிவாரத்துடன் இம்மாதம் 27-ந்திகதியாகிய வருகிறசெவ்வாய்க்கிழமைகாலையாழ்ப்பாணத்துக்கு விஜயஞ்செய்ய விருக்கின்றார். இங்கே அவர் மூன்றுநாள்தங்கியிருந்து பின்னர் 30-ந்திகதி வெள்ளிக்கிழமை மன்னாருக்குவிஜயஞ்செய்வார்.



சதா சகாய மாதாவின் கோணம்

உலகத்திலே மனிதரால் ஏற்றுக் கொள்ளப்பட்ட அதிசயங்கள் ஏழு என்பது நாம் அறிந்ததே. சதாசகாய மாதாவின்போரால் நடைபெற்றுவரும் நோவனைப்பத்திமுயற்சி உலகத்தின் எட்டாம் அதிசயமெனக் கணிக்கப்படலாம்என அன்று ஒருபிரசங்கியார் சொல்லியது எல்லோரும் ஆழ்ந்துசிந்திக்கக்கூடிய ஒருகாரியந்தான், இந்த அதிசய பத்திமுயற்சி உலகத்தின் எல்லாப்பாகங்களிலும் பரந்து, மனுக்குலத்தோருக்கு அளப்பரும் நன்மைகளைச் செய்துகொண்டுவருகிறது. தேவதாயாரை வாயார, மனமார வாழ்த்தித்துதித்து அவளின் சலுகைகளை இரந்துஅடைகிற பக்தகோடிகள் தொகை நாளாந்தம் பலுகிப்பெருகிக்கொண்டு வருகிறதெனப் பத்திரிகைகள்,துண்டுப்பிரசுரங்கள்மூலம் அறிந்து ஆனந்தங்கொள்ளாமல் இருக்கமுடியாது. பத்திரிகைகள், புத்தகங்கள் தேவையில்லை. நமது கொஞ்சேஞ்சி மாதாவின் ஆசனக்கோவிலில் ஒவ்வொரு புதன்கிழமையும் சாயந்தாம் நடைபெறும் சதாசகாயமாதா பத்திமுயற்சியின்போது சமுகங்கொடுத்திருக்கும் பக்தர்களின் தொகையே சிலவேளை எவரையும் பிரமிக்கச்செய்துவிடுகிறது. எள்ளிட இடமின்றித் தேவாலயம் மரியாயின் தாசர்களாற் தேங்கிவழிகிறது. இதற்குரிய நியாயந்தான் என்ன? கேளுங்கள்:

"சென்றபுதன்கிழமை எனக்குத் தாங்கமுடியாத குத்துவலி ஏற்பட்டது. எனது சிநேகிதர்கள் உடனே வைத்தியரிடம் போகுமாறு வற்புறுத்தினார்கள். ஆனால்,சதாசகாயமாதாபத்திமுயற்சி கோவிலில் நடைபெறும்வேளை வந்துவிட்டது. அதிற்பங்குபற்றுவதைக் கைவிட்டு வைத்தியரிடம்போக என்மனம் ஒருப்படவேயில்லை. அதனால்மாதாவை நம்பிக்கொண்டு வைத்தியரிடம் போவதற்குப்பதிலாக அன்றுநடந்த சதாசகாயமாதாவின் பத்திமுயற்சியிலே மிகுந்த கஷ்டத்துடன்போய்ப் பங்குபற்றினேன். பக்திமுயற்சிநேரத்திலும் அதிகம் கஷ்டப்பட்டேன். ஆனால், முடிவில் கோவிலைவிட்டு வெளியேசெல்லும்போது எவ்விதவருத்தமும் இல்லாததுபோல் உணர்ச்சியடைந்தேன். பின்னர் நான் பாவசங்கீர்த்தனஞ் செய்துவிட்டு மிகுந்தசந்தோஷத்துடன் வீடுபோய்ச்சேர்ந்தேன். சதாசகாயமாதா வாழ்த்தப்படுவாராக" என்று சரீரசுகமும், ஆன்மலாபமும் அடைந்து திருப்திகொண்ட பக்தர் ஒருவர் தெரிவிக்கிறார்.

வேறொருவர்: "சென்றஞாயிறுவாரம் மாலை 7-15 மணியளவில் நாங்கள் 30 பேர் இக்னியாக்கலைசென்று திரும்புகையில் நாங்கள் பிரயாணஞ்செய்த லொறி தலைகீழாகப்புரண்டது. எல்லோரும் பெரியஆபத்தினிற் சதாசகாயமாதாவின் விசேஷபாதுகாப்பால் காப்பாற்றப்பட்டோம். நான் இந்த அபாயத்தில் மரணத்துக்குக் கிட்டடியில் இருந்தேன். என்மேல் இருந்த பாரத்தால் மூச்சுவிடவாவது, மேலேஎழும்பவாவது முற்றாய் முடியாதிருந்தது. சதாசகாயமாதவைநினைத்தேன். எனக்குத்துணைபுரியும்படி அபயமிட்டு இரந்துகேட்டேன். என்ன ஆச்சரியம்! என்னை அழுத்தியபாரம் எதிர்பாராதவிதமாகநீங்கினது. மூச்சுவிட இலேசாகவிருந்தது. எவ்வித கஷ்டமும் இன்றி எழுந்தேன். உயிர்பிழைத்தேன். சகாயமாதாவுக்கு—என் நல்ல தாய்க்கு என் மனமார்ந்த நன்றி" என்று எழுதிஅறிவிக்கிறார்.

# பாலர் பக்கம்

## அண்ணு சொல்வது

பிரியசகோதரங்களே!

கபடற்றதனம் ஞானவளர்ச்சியின் முதற்காரணமாய் இருக்கிறது. ஏனெனில், அது சருவேசுரனுக்கு மிகவும் பிரியமானதும், அவருடைய கொடைகளை இலகுவாக நமக்குப் பெற்றுத் தருவதுமாய் இருக்கிறது. இதுவே சாங்கோபாங்கத்தை அடையச் சிறிய புஷ்பம் கைக்கொண்ட பெரிய இரகசியம்.

உலகத்தையும், நிலையற்ற சிருட்டிகள் யாவற்றையும் விட்டு மனிதன் மேல்நோக்கிச் செல்வதற்குரிய இரு சிறகுகள் அன்பும், கபடற்ற தன்மையுமாம். எண்ணத்தில் கபடற்ற தன்மையும், சித்தத்தில் அன்புமாம். கபடற்றதனம் சருவேசுரனை நாடியோடும்; அன்பு அவரை அடைந்து இன்புற்றிருக்கும் என்று கிறீஸ்துநாதர் அனுசாரம் சொல்லுகிறது.

எங்களைக் குன்ரு இளமையில் வைத்திருக்கும் கபடற்ற தன்மை உங்கள் ஒவ்வொருவருடையவும் விலையேறப்பெற்ற பொக்ஷமாக இருக்க வேண்டும். கபடற்றதன்மையே மேன்மை.

வணக்கம்!

உங்கள் அன்புள்ள
அண்ணு

## அர்ச். பிரான்சீஸ் சவேரியார்

### 20. அர்ச். சவேரியாரும் நின்சின்னும், (1550)

"காகோசிமா" என்னும் பட்டணத்தில்ஓர் புத்தசமயஸ்தாபனத்திற்கு நின்சின் என்பவன் தலைவனுய் இருந்தான். இவன் சவேரியாரை இடையிடையே தனது இல்லத்துக்கு அழைத்து அவருடன் நட்பாக உரையாடுவான்.

"ஒருவனின் தலை உடலிலிருந்து துண்டிக்கப் பட்டபின் அவனுடைய ஆத்துமத்தின் கதியாது?" என்று கேட்டால், "சரீரம் அழிவுற்றதும் ஆன்மாவும் அழிந்துபோய் விடுகின்றது" என்றே அந்தஸ்தாபனத்தைச் சேர்ந்தவர்கள் பூரண நம்பிக்கையுடன் விசுவசித்து வந்தார்கள். ஆனல், அர்ச். சவேரியார் இந்தக்கொள்கைக்கு மாருகச் "சரீரம் அழிந்துபோனுலும் ஆன்மாவோ அழிவுருது; சீவித்தே வருகின்றது" என்னும் உண்மையான விசுவாசசத்தியத்தை அவர்களுக்குத் தெளிவாகப் போதிக்கலானர். அத்துடன் "ஒருவன் புண்ணியவானுய்ச் சீவித்து வருவானேயாகில் மரித்தபின் அவனுடைய ஆத்துமம் மோட்சசம்பாவனையை அடையுமென்றும், பாவத்திலே நாட்டமுடையவனுய் நிர்ப்பாக்கிய அந்தஸ்திலே சீவித்து மரிப்பானேயாகில் அவனுடைய ஆத்துமம் நித்தியநரக வேதனையையே அடையுமென்றும் நின்சினுக்குப் படிப்பிக்கலானர். இப்புதிய சத்தியத்தை அறிந்தநாள் தொடக்கம் நின்சின்னின் மனதில் ஓர் புத்துணர்ச்சி ஏற்படலாயிற்று. "என்னுடைய ஆத்துமம் அழிவற்றது" என்று இரவும் பகலும் சொல்லிக்கொண்டு அதையே சிந்தித்து வரலானன்.

ஒருநாள் சவேரியார் அவனுடன்சம்பாஷிக்கும்போது "வாலிபம், வயோதிகம் எனும் இரண்டிலும் ஒன்றைத் தெரிவுசெய்து கொள்ளும்படி உன்னைக் கேட்டால் நீ எதைத் தெரிவுசெய்வாய்" என்று அவனைக் கேட்டார். அவன் அதற்கு ஓர்வித தயக்கமுமின்றி "வாலிபத்தையே தெரிவுசெய்வேன்; ஏனெனில், நான் விரும்பும் எதையும் செய்துகொள்ள வாலிபப்பருவமே சிறந்தது" என்று பதில் கூறினன். அவ்வாருயின் "ஓர் சமுத்திரத்திலே மரக்கலம்ஒன்றில் பிரயாணம்செய்யும் மாலுமி ஒருவன் பிரசண்டமாருதம் உரமாக வீசும்போது சமுத்திரத்தில் தங்குவதை விரும்புவானே? அல்லது புயலின் உக்கிரத்திலிருந்து தப்பித்துக்கொள்ளக் கூடிய துறையைப் போயடைய விரும்புவானே?" என்று நின்சின்னிடம் கேட்கலானர். அதற்கு அவன் மறுமொழியாக "குருவே! தாம் சொல்வதின் கருத்து எனக்குப் புலப்படுகின்றது. ஆயினும் எனது நீசஆன்மாவாகிய கப்பல் எத்திசையை நோக்கிச் சென்றுகொண்டிருக்கின்றதென்பதை நான்சிறிதும் அறியேன்" என்று பணிவுடன் கூறினன்.

இப்புதிய சமயத்தையும், அதின் சத்தியங்களையும் அறிய வந்ததும், அவனுக்குக் கிறீஸ்துநாதரைப் பின்பற்றுவதோ, அல்லது புத்தரைப் பின்பற்றுவதோஎனத் தெரியாது மனக்கிலேசப் படலானன்.

அர்ச். சவேரியார் ஒருவருஷம் மட்டும் "காகோசிமா" வில்தங்கியிருந்து தமது தொண்டுகளைப் புரிந்தபின் அவ்விடத்தை விட்டுப் புறப்படலானர். அவருக்குப்பின் இருதடவைகளில் கத்தோலிக்க குருமார் அவ்விடத்தைத் தரிசித்தனர். அவர்கள் வந்தபோது நின்சின் தப்பாது அவர்களைப்போய்ச் சந்தித்தான். "தேவகுமாரனுகிய கிறீஸ்துநாதரையே விசுவசித்தும் அவரையே ஆராதித்தும் வருகிறேன்" என்று அந்தக் குருமாருக்கு அறிவித்தான். மேலேகூறியபடி அவன் இரகசியமாக விசுவசித்து வந்தானேயாயினும் துணிவுடன் முன்வந்து ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளாது ஏறக்குறைய 26 வருஷம்வரையும் பின்போட்டே வந்தான். ஆனல், சாகப்போகும் தறுவாயிலிருக்கும்போது, தனக்கு ஞானஸ்நானம் கொடுக்க ஒரு கத்தோலிக்க குருவானவரை அழைத்துவரும்படி ஆட்களை அனுப்பினன். என்ன பரிதாபம்! குருவானவர் அவன் படுக்கையண்டை வந்து சேருமுன் "நின்சின்" மரிக்கலானன். இவ்விதமே நம்மில் அநேகர் தேவன் நமக்குச் சொரிந்தருளும் வரப்பிரசாதங்களை அலட்சியம் பண்ணிவிட்டு மூடராய்ச் சீவியம்நடாத்தி வருகிருேம். அப்படிப் பின்போடுவதால்நின்சின் அடைந்தகதியே எங்களுக்கும் நேரக்கூடும்.

# நெல்

1

நெல்லையுண்டு வாழும்நேச பாலகா!—அந்த
நெல்லைக்கண்டும் வாழலாமே சீலமாய்.

2

நாம்வளர்க்க நமைவளர்க்கும் நெல்லைப்பார்—எந்த
நாளும்நன்றி மறவேலென்ற சொல்லைக்கார்.

3

நெல்விற்பதரை நீக்கிப்போக்குந் தன்மைபோல்—நீயும்
நிதமுந்தீயர் உறவைநீக்கி வாழுவாய்.

4

அரிசி, நெல்லின் உமியைநீங்கின் வளருமோ?—என்றும்
அமலன்யேசு துணையடைந்து வளருவாய்.

"ஜேயம்"

# இளமை

"இளமையிற்கல்வி சிலையில்எழுத்து."

"இளமைப்பருவம் இறைவனருளிய பெரும்பாக்கியம்."

"நீர்க்குமிழி போன்றது இளமை; நிலையற்றது."

"இளமைப் பருவமே ஒருவனை வருங்காலப் போராட்டத்திற்குத் தயார்செய்யுங் கலாசாலை."

"நன்னேக்கம், நற்குணம் என்னும் வித்துக்களை உன்னுடைய பசுமையுள்ளத்தில் இப்போதே பயிர்செய்."

"இளமையில் விதைத்தால்தான் முதுமையில் அறுவடை செய்யலாம்."

"இளமையில் வீணுகும் ஒவ்வொருவினடியும் ஈடுசெய்ய முடியாத பெரும்நஷ்டம்"

"ஜேயம்"

# உதிர்ந்த முத்துகள்

ஜெருசலேம்பட்டணத்துச் சமோனஸ் மேற்றிராணியாரைப் பகிரங்கமாகப் பரிகாசஞ்செய்ய ஒருமுஸ்லீம் தீர்மானித்து, திவ்விய நற்கருணையைப் பற்றி அவரிடம் மூன்றுகேள்விகள் கேட்டான். "அப்பமும் இரசமும் கிறீஸ்துநாதருடைய சரீரமும், இரத்தமுமாக எப்படிமாறக்கூடும்?" என்பது முதற்கேள்வி. "நீ சிறுபிள்ளையாயிருந்தவன், இப்பொழுது பெரியஆளாயிருக்கிருய். ஆகாரத்தையும், பானத்தையும் மானிடசரீரமானது மாம்சமாகவும், இரத்தமாகவும் மாற்றமுடியுமானல், அவ்விதம்மாற்றுவது கடவுளுக்கு அதிகசுலுவாகும்" என்று மேற்றிராணியார் பதிலளித்தார். "ஒருசிறு அப்பத்தினுள் கிறீஸ்துநாதர் எவ்விதம் இருக்கமுடியும்?" என்று அவன்கேட்டான். "வானம் மிகப்பெரிது, உன் கண்மிகச்சிறிது. எனினும் அந்தப் பிரமாண்டமானவானத்தை உன்கண்ணனது தன்னுள் அடக்கிக்கொள்ளுகிறது" என்று அவர்கூறினர். "கிறீஸ்துநாதரின் அதேசரீரம் எல்லாக்கோவில்களிலும் ஒரேசமயத்தில் எவ்விதம் இருக்கமுடியும்?" என அவன்கேட்டான். "ஒருபெரியகண்ணுடியில் உன் உருவம் ஒருமுறை பிரதிபிம்பிக்கிறது. அந்தக்கண்ணுடியை நூறு துண்டுகளாக உடைத்துப்போடு. ஒவ்வொரு துண்டிலும் உன் உருவம்முழுவதும் பிரதிபிம்பிக்கிறது. நமது அனுதின வாழ்க்கையில் இவைகள் சாத்தியமாகுமானல், கடவுளால் எல்லாம் சாத்தியமாகும்" என மேற்றிராணியார் கூறினர்.

* * *

ஒருகுருவானவர் உலாவப்போகும் போதெல்லாம் ஒருமனிதன் தன்குதிரையைத் தேய்த்துக் குளிப்பாட்டித் தீனிபோடுவதைக் கவனித்தார். "ஒவ்வொருநாளும் உன்குதிரைக்காக நீ எவ்வளவுநேரம் செலவழிக்கிருய்?" என அவனிடம்கேட்டார். "ஏறக்குறைய இரண்டுமணிநேரம்" என அவன் பதிலளித்தான்.

"உன் ஆத்துமத்துக்காக எவ்வளவு நேரம் செலவழிக்கிருய்?"

"காலைமாலைச்செபங்கள், ஞாயிறு பூசை இவ்வளவுதான்."

"அப்படியானல் நான் உன்குதிரையாயிருக்க விரும்புவேனே அல்லாமல், உன் ஆத்துமமாயிருக்க விரும்பமாட்டேன்" எனக் குருவானவர் சொல்லிச் சென்ருர்.

* * *

சிறைச்சாலையின் சன்னலுக்கருகில் அர்ச். லோறென்ஸ் முழந்தாளிட்டுச் செபிக்கையில் சூரியன்உதித்தது. "சற்றுமுன் இருள் பரவியிருந்தது. இப்பொழுது ஒளி ஏற்பட்டுவிட்டது. இன்னொருபுதியநாளைக் கடவுள் உண்டாக்கியிருக்கிருர்" என அவர்மகிழ்ச்சியுடன் சத்தமாய்ச்சொன்னர். அவருடன்சிறைப்பட்டிருந்தவர்கள் இதைக்கேட்டு அதிசயித்து, "ஒவ்வொருநாளும் இவ்விதம்நடக்கிறதே. இதில் ஒருவிசேஷமுமில்லையே; இதில் புதுமைஒன்றுமில்லையே" என்றனர். "இது ஒருபுதுமை; நமக்கு நல்லபடிப்பினை. உலகத்தை இவ்விதம் விடாது புதுப்பித்துவரும் கடவுளுக்கு நாம் இடைவிடாது நன்றி கூறவேண்டும். ஆனல், மனிதன் அற்பமானவன், நிறைவற்றவன், குறையுள்ளவன். ஒவ்வொரு நாளும் பார்ப்பதால், நமதுவாழ்வில் ஒவ்வொருவினடியும் காண்பிக்கப்படும் கடவுளின் அதிசயங்களை அவன்மறக்கிருன்" என அர்ச்சியசிஷ்டர் மொழிந்தார்.

## உங்களுக்குத் தெரியுமா?

1. சுவிசேஷங்களில் எது கிரேக்க பாஷையில் எழுதப்படவில்லை?

அர்ச். மத்தேயு சுவிசேஷமே. இது அராமத்தியபாஷையில் எழுதப்பட்டது.

2. கல்வாரி என்ற சொல்லுக்கு அர்த்தம் என்ன?

மண்டைஓடு என்பதாகும். இது லத்தீனிய, கிரேக்கபாஷைச் சொற்களிலிருந்து பிறந்தது.

3. கருதினால்மார் அணியும் செந்நிறத் தலைச்சீரா (The Red Hat) என்பது என்ன?

இது கருதினால்பதவிக்குரிய சின்னமாகும். இற்றைக்கு 700 வருடங்களின்முன்னர் 4-வது இன்னொசெந்து எனும்பாப்பானவரே இதனைமுதன்முதலாகவழக்கத்துக்குக் கொண்டுவந்தார். இதன் திலக்கமான சிவப்புநிறமானது இளவரசனென்பதையும், வேதசாட்சியத்துவத்தையும் குறிக்கின்றன. பாப்பரசரால் ஒருவருக்குப் பயபக்திக்குரிய திருவைபவங்களுடன் கருதினால்பட்டஞ்சூட்டி இந்தச்செந்நிறத் தலைச்சீரா அவர்சிரசில் தரிக்கப்படும் அந்த ஒரேயொருமுறைமாத்திரம் அதுபுதிய கருதினாலால் அணியப்படுகிறது. பின்னர்அது பத்திரமாகஓரிடத்தில் வைக்கப்படும். பிறகு அக்கருதினால் அதை ஒருபோதுமே அணிவதில்லை. கடைசியாக அவர்மரிக்கும்போது அவரது பிரேதப்பேழையின்மேல் வைக்கப்பட்டுப் பிந்த அக்கருதினாலின் ஆசனக்கோவிலிலே துகளாகிறவரையில் தொங்கவைக்கப்படுகிறது.

4. உலகில் மகாப்பிரமாண்டமான கிறீஸ்துஇராசசுரூபம் எங்கேஇருக்கிறது?

மெக்சிக்கோநாட்டிலே குவானுருவாற்றோமாகாணத்தில் லீயோன்நகருக்குச்சமீபமாய் அம்மாகாணத்தின் அதிகம்உயர்ந்த மலைஉச்சிமீது இருக்கின்றது. இது ஏறக்குறைய அந்நாட்டின் சரிமத்தியதானத்தில் இருந்துவருகின்றது. "நம்மிடம் வாருங்கள்" எனும் திருமொழிக்கொப்பான அபிநயத்தை உண்டுபண்ணும் வகையில் எவரையும் அணைத்துக்கொள்ளுமாறு அன்புததும்ப இருகரங்களையும்நீட்டிய வண்ணமாய் இது அமைந்திருக்கிறது. சமீபத்திலே அந்நாட்டின் சகலபகுதிகளிலுமிருந்து ஒருலட்சம்யாத்திரிகர்கள் நம்திவ்வியஇரட்சகருக்குத் தங்கள்வந்தனைவழிபாடுகளைச் சமர்ப்பிக்குமாறு அங்குசென்றிருந்தார்கள். இந்தச்சுரூபம் 65 அடி உயரமுள்ளது. குவாடலூப்நாயகிக்குரிய ஓர்திருசேத்திர மாடத்தின்மீது நிறுவிநிற்கின்றது. அந்தீஸ்மலைமேல் இருந்துவருகின்ற அலங்காரமான கிறீஸ்துநாதரின் சுரூபத்தைக்காட்டிலுமே இதுபெரியது.

5. உலகின் மிகப்பிரமாண்டமான தலைஉருவச்சிலைகள் எங்கே இருக்கின்றன?

ஐக்கியஅமெரிக்கதேச தென் டகோட்டாமாகாணத்திலுள்ள கருங்குன்றுகள்மேல் கடல்மட்டத்துக்குமேலாக 6,000 அடிஉயரத்தில் இருக்கின்றன. இவைகள் ஐக்கியஅமெரிக்கதேச ஜனாதிபதிகளாய் விளங்கியிருந்த ஜோர்ஜ் வாஷிங்ரன், தோமஸ் ஜெவ்வேர்சன், தியடோர் றூஸ்வெல்ற், ஏபிரகாம் லின்கன் எனும் பெரியார்களின் தலை உருவச்சிலைகளாகும். மனிதராலே எக்காலத்திலாவது செய்துமுடிக்கப்பெற்ற மிகப்பிரமாண்டமான சிற்பவேலைபாகிய இந்தத்தலைகள் திண்மையானகருங்கல்லில் செதுக்கப்பட்டுள்ளன. மோவாயிலிருந்து நெற்றிவரையில் ஏறக்குறைய 68 அடி நீளமுடையன. இந்தத் தலைகளின் பருமனைக்கொண்டு மதிக்குமிடத்து, கால்முதல் தலைவரையிலே முழுமனித உருவமும் 450 அடி உயரமுடையதாயிருக்கும். இவைகளைச் செதுக்கிப் புகழ்படைத்தவர் அமெரிக்க பேரான சிற்பியாகிய கட்சன் போர்கிளம் என்பவரே. இவர் சான்பிரான்சிஸ்கோவிலும், பரீஸிலும் சிற்பக்கலைபயின்றவர். வருடந்தோறும் ஐந்துலட்சம் ஐக்கிய அமெரிக்கதேச விநோதப்பிரியரான தேசசஞ்சாரிகள் இவைகளைத் தரிசித்துச்செல்லுகின்றார்கள். இவைகள் "மவுண்ட் றஷ்மோர் தேசிய ஞாபகசின்ன"மென அறியப்படுகின்றன.

## பொதுவர்த்தமானம்

### "கடவுளைத் தள்ளிவிட்டோம்"

சமீபத்தில்நடைபெற்ற இத்தாலிய தேர்தல்களிலே வெற்றியடையுமாறு கம்யூனிஸ்தர்கள் முயன்றுகொண்டிருக்கும்போது, ஆவேசங்கொண்ட ஸ்ராலினிய கட்சியாளன்ஒருவன் றோமஞ்ஞாவிலுள்ள ஓர் சிறிய கிராமத்திலிருந்த ஓர் குருவானவரைநோக்கி: "எங்களை எதிர்த்துப் போராடுவதில் யாதுபலனும்வரப்போவதில்லை. சமயம் இறுதிகண்டுவிட்டது. கம்யூனிஸ்தராகிய நாங்கள் கடவுளைத் தள்ளிவிட்டோம்" என்று வீம்புபேசினான். அப்போது அந்தக்குருவானவர்: "என்மகனே! நீங்கள் அதிர்ஷ்டசாலிகள்; கடவுள்இன்னமும் பொறுத்துக்கொண்டு இருப்பதையிட்டு அவருக்கு நன்றிசெலுத்துங்கள்" என்று சாந்தமாக மொழிந்தார்.

### சீனக்கம்யூனிஸ்தஆட்சி

சீனக்கம்யூனிஸ்தஆட்சியானது சென்ற ஐந்துவருடங்களிலும் 1 கோடியே 40 லட்சம்பேருக்கு மேற்பட்டவர்களை மாணதண்டனைக் குள்ளாக்கியோ, அன்றேல் மரணத்துக்குள்ளாக்கியோ இருப்பதாகக் கண்டறியப்பட்டிருக்கிறது. இவர்களில் 50 லட்சம் பேர் கம்யூனிஸ்த விரோதிகளால் நாட்டுப்புறங்களிலே பெருங்காணி பூமிக்காரர் அல்லது கிராமக்கொடுங்கோலரென்று குற்றஞ்சாட்டிமரணதண்டனை விதிக்கப்பட்டார்கள். 30 லட்சம்பேருக்கு மேற்பட்டசீனர் சீனத்தேசிய அரசாங்கத்துக்காக உழைப்பவரென்றும், 26 லட்சம் சீனர் கொள்ளைக்காரரின் தூதர்களென்றும், துரோககுணமுள்ள வியாபாரிகளென்றும் குற்றஞ்சாட்டிக் கொன்றழிக்கப்பட்டார்கள்.

### ஸ்ராலினைப்பற்றிய கதை

திரு. மத்தியூஹால்ரன்என்பவர் பின்வரும் சம்பவத்தைப் பத்திரிகைகளில் வெளியிட்டிருக்கின்றார். இது தமக்குச்சொல்லப்பட்ட முதற்தரமான ஸ்ராலின்கதைகளில் ஒன்றென்பதாகவும், பெல்கிறேட்நகரிலே தாம்அதைக் கேட்டதாகவும் அவர் கூறுகின்றார். அதாவது, ஜேர்மனியின் கிழக்கு-மேற்குப்பகுதிகளுக்கிடையிலே எல்லைப்புறமாகப் படைக்காவலரான ஓர் ரூஷிய போர்வீரனும், ஓர் பிரித்தானியபோர்வீரனும் காவல்செய்துகொண்டு நின்றனர். பிரித்தானியபோர்வீரன் தனது கடிகாரத்தை எடுத்துப்பார்த்துவிட்டு, "இன்னும் 10 நிமிஷம்மாத்திரம்; அதன்மேல் எனக்கு வேலைமுடிந்து போய்விடுவேன்; கடவுளுக்குத்தோத்திரம்" என்றான். அப்போது ரூஷிய போர்வீரனும் தனது கடிகாரத்தை எடுத்துப்பார்த்துவிட்டு, "இன்னும் பத்துநிமிஷத்தில் எனக்கும் வேலைமுடிந்து நானும்போய்விடுவேன்; ஸ்ராலினுக்குத் தோத்திரம்" என்றான். அதைக்கேட்டுநின்ற பிரித்தானிய போர்வீரன் திகைப்படைந்தவனாய், "ஏன் ஸ்ராலினுக்குத் தோத்திரம்? ஸ்ராலின் இறந்துவிட்டால் நீ என்ன சொல்லுவாய்?" என்று கேட்டான். அதற்கு ரூஷியன் மறுமொழியாக: "கடவுளுக்குத்தோத்திரம்" என்று சொல்லுவேனென்று புன்முறுவலுடன் கூறினான்.

## வெள்ளியூபிலி விழா

நெடுந்தீவு, நடுப்பகுதியிலே அப்போஸ்தலரான அர்ச். தோமையார் கோவில் சக்கிறிஸ்தாமான திரு. சில்வேஸ்தர் அந்தோனிமுத்துஎன்பவரது சக்கிறிஸ்தாம்சேவையின் 25-வது வருட வெள்ளியூபிலிவிழா சென்ற 2-1-53 வெள்ளிக்கிழமை காலை 6-30 மணிக்கு மேற்படி கோவிலில் 500-க்கு மேற்பட்டகத்தோலிக்கர் சமூகமாகப் பாடற்பூசையுடன் ஆரம்பமாகியது. பூசைமுடிந்ததும் யூபிலிநாயகரையும், பாரியாரையும் மாலைசூட்டி வரவேற்று இதற்கெனச் சித்தஞ்செய்யப் பெற்றிருந்த மண்டபத்தைஅடைந்ததும் வண. ஏ. சுவாம்பிள்ளைசுவாமியவர்களின் தலைமையிலே திவ்விய இஸ்பிரீத்துசாந்துவின் செபத்துடன் உபசாரணைநடைபெறலாயிற்று. திரு. ஜே. கொனிஸ்ரன்ஸ்ஆசிரியரால் வாழ்த்துப்பத்திரம் படித்துவழங்கப்பட்டது. ஆசிரியர் எஸ். சின்னப்புநாயகம், திரு. ஜி. அந்தோனிப்பிள்ளை, ஆசிரியர் எஸ். சுவக்கீம், ஆசிரியர் ஏ. ஏ. யோசேப்பு, நெசவுஆசிரியர், கிராமச்சங்கத்தலைவர் ஆசிரியர் ஜேம்ஸ், திரு. ஏ. கஸ்பார் செல்வம், வண. ஏ. சுவாம்பிள்ளைசுவாமியார் என்பவர்கள் சக்கிறிஸ்தாமின் சேவையும், அயராஉழைப்பும, பக்தித்தாகமும் என்பனவற்றை எடுத்துக் காட்டிச் சொற்பொழிவாற்றி அவரை மகிழ்வித்தனர். யூபிலிநாயகர் நன்றியுரைகூறியதும் திரு. ஜே. கொனிஸ்ரன்ஸ்ஆசிரியரால் பொற்கிழி வழங்கப்பட, தாம்பூலம்ஆதியன பரிமாறப்பட்டபின் யூபிலிநாயகரை அவரதுஇல்லத்துக்குஅழைத்துச்சென்று உபசரித்ததும் விழா 10-30 மணியுடன் இனிது முடிவுபெற்றது.

— ஜே. சி.

## பெரிய கல்லாறு

அர்ச். அருளானந்தர் ஆலயத்திலே சென்ற 29-12-52 திங்கட்கிழமை பிற்பகல் 4 மணியளவில் வண. கட்டனைக்குரவர் ஜி. ஈ. எல். வம்பேக்சுவாமியவர்களின் ஆதரவில் 250 சிறுவர்கட்கு நத்தார்வெகுமதிகள் அளிக்கப்பட்டன. திரிகோணமலை மேற்றிராணியாண்டவர்அவர்கள் திவ்விய பூசைக்கு ஒழுங்காகச் சமூகமளித்த சிறுவர் சிறுமிகளுக்கும், தவறாது பூசைக்குஉதவிபுரிந்த சிறுவர்களுக்கும் வெகுமதிகள்வழங்கினர். அதன்பின் தேற்றாத்தீவுக் கத்தோலிக்கபாடசாலை மாணவர்களால் வரவேற்புப்பாக்கள் படிக்கப்பெற்றுச் சிறுசிறு நாடகங்களும் நடிக்கப்பட்டன. ஆண்டவர் அவர்கள் சொற்பொழிவாற்றிய பின் கட்டளைக்குரவர் வண. வம்பேக்சுவாமியவர்களால் கொண்டாட்டத்திற்குச் சமூகமளித்த சந்நியாச சகோதரர்க்கும், ஏனைய பெரியோர்க்கும், கொண்டாட்டத்தைநடாத்தப் பணஉதவி, சரீரஉதவிசெய்த சகலருக்கும் நன்றியுரை கூறியதும் கொண்டாட்டம் கலைவுற்றது.

கல்லாற்றுக் கத்தோலிக்க ஐக்கிய ஊழியசங்கத்தின் நான்காவதுவருடப் பொதுக்கூட்டம் அர்ச். அருளானந்தர் பாடசாலையில் ஆசிரியர் மரியான்தம்பி அவர்களதுஅக்கிராசனத்திலே செபத்துடன் ஆரம்பமாகியது. வண. ஜி. ஈ. எல். வம்பேக்சுவாமிகளும், 25 அங்கத்தவர்களும் அதற்குச்சமூகமாயிருந்தனர். காரியதரிசியவர்களால் வருடாந்த கூட்டஅறிக்கை வாசிக்கப்பட்டதும் தனாதிகாரியின் வரவுசெலவுக்கணக்குகள் சமர்ப்பிக்கப்பெற்றுப் புதுஆண்டுக்குரிய உத்தியோகஸ்தர்கள் பின்வருமாறு தெரிவுசெய்யப்பட்டார்கள்.

அக்கிராசனர்:
ஜி. எஸ். மரியான்தம்பி
உபஅக்கிராசனர்:
எம். எஸ். வஸ்தியான்பிள்ளை
காரியதரிசி:
கே. ரி. மரியதாசன்
உபகாரியதரிசி:
ஜி. ஏ. செல்லத்தம்பி
தனாதிகாரி:
எஸ். சலமோன்
பிரதிநிதி:
எஸ். ஈ. அந்தோனி
நிருவாகசபைஅங்கத்தவர்கள்:
கே. செபஸ்தியான்
எஸ். சி. அரசரெட்டினம்
எம். லீயோ
எஸ். வி. பத்திநாதன்
ஜி. வி. கோபாலபிள்ளை

— S. E. A.

## நாடு சங்கதிகள்

— கோறியாவிலே யுத்தத்தில் ஈடுபட்டிருக்கின்ற சீனப்படைகளுக்குச் சீனச்சமாதான கம்மிற்றி அனுப்பிய கிறிஸ்மஸ்விழாச்செய்தியிலே, சென்ற 1952-ம் ஆண்டில் அவைகள் ஐக்கிய நாடுகளைச்சேர்ந்த 2,40,000 போர்வீரரை யுத்தஞ்செய்யமுடியாமல் பண்ணிவிட்டதாகவும், 5,300 விமானங்களுக்குமேல் சுட்டுவிழுத்தியும், சேதப்படுத்தியும் விட்டதாகவும் தெரிவித்திருக்கிறதாம். இதுதான் "சமாதான வாக்கு"என்று பம்பாய்நகர பத்திரிகைஒன்று மகிடியாகக் கூறியிருக்கிறது.

— சோவியற்அரசின் ஆதிக்கத்திலுள்ள கிழக்கு ஜேர்மனியிலிருந்து சென்றமார்கழிமாதத்தின் கடைசி ஐந்துநாட்களிலும் மூவாயிரம் ஜேர்மனியர் வெளிகொண்டு மேற்குஜேர்மனிக்குச் சென்றிருக்கிறார்கள். அம்மாதம் 19-ந் திகதியன்று மாத்திரம் 1,300 ஜேர்மனியர் ஓடித்தப்பியிருக்கின்றனர். சென்ற 1952-ம் ஆண்டிலே கிழக்குஜேர்மனியிலிருந்து ஒன்றரை லட்சம ஜேர்மனியர் இவ்வாறு ஓடித்தப்பியிருக்கிறார்கள்.

— செக்கோசிலவாகியாவிலும், ஹங்கேரியிலும் செய்ததுபோல ஆஸ்திரியாவிலும் பலவந்தமாக அதிகாரத்தைக் கைப்பற்றக்கூடிய ஓர் நிலைமையைக் கொண்டுவருவதற்குக் கம்யூனிஸ்தர்கள் முயன்று வருகிறார்கள்; அதனால் ஆஸ்திரியா நடுநிலைமைநாடாயிருக்க வேண்டுமென்று அவர்கள் பிடிவாதமாகநிற்கிறார்கள்என்று ஆஸ்திரிய வெளிநாட்டு மந்திரியாரான காள் குறுபர் கூறுகின்றார்.

— கோறியாவிலே ஐக்கியநாடுகள் தங்கள்இராணுவத்தைப் பெருக்கப் பிடித்துத் தாக்குவதெதுவும் மூன்றாவது உலகயுத்தத்துக்கு வழிபண்ணுமென்று சீனக்கம்யூனிஸ்த பிரதமரான சோ என்-லாய் கூறுகின்றார். ஆனால், அமெரிக்க புதியபிரசாதிபதியான ஐஸன்ஹாவர்அவர்களோ உக்கிரதாக்குதலாலே கோறியயுத்தத்தை முடிவுக்குக்கொண்டுவருதற்கான புதியதிட்டத்தைச் செய்திருக்கின்றார்.

— எகிப்திய இரும்புமனிதரென அறியப்படுகின்ற பிரதமர் முகம்மது நாகிப்என்பவர் சென்றவாரம் தமதுஅரசாங்கத்தைப் புரட்டுதற்குச் செய்யப்பட்ட ஓர்அரசியற்புரட்சிச்சதியைப் புரட்டிவிட்டதைத்தொடர்ந்து அந்நாட்டிலுள்ள அரசியற்கட்சிகளையெல்லாம் விலக்கிவிட்டிருக்கின்றார். இத்தப்புரட்சியைத் திட்டஞ்செய்த 25 பட்டாளஅதிகாரிகள் கைதுசெய்யப்பட்டிருக்கின்றார்கள்.

— ரூஷியாவிலும், கம்யூனிஸ்தஆட்சியிலுள்ள கிழக்குஐரோப்பியநாடுகளிலும் யூதர்களைஒழிக்கும்வேலை மும்முரமாக நடைபெறத் தொடங்கியிருக்கிறது. அதனால்அவர்களைஒழிக்கும் கொள்கையைக் கைவிட்டு, அந்நாடுகளில்வசிக்கும் 25 லட்சம் யூதர்களையும் வெளிநாடுசெல்ல அனுமதிக்கும்படியாய் அமெரிக்கயூதஸ்தாபனம் தனதுதீர்மானங்கள்மூலம ரூஷியாவைக்கேட்டுக்கொண்டிருக்கிறது.

# ஐயோ, அலெக்சிஸ்! உன் ...

அந்தச்சிற்றூர் போலாந்து நாட்டில். ருஷியாவின் எல்லையிலிருந்து சிலமைல் தூரத்தில். ஒருநாள்மாலை ருஷியன் ஒருவன் வண. ஸ்தனிஸ்லாஸ் சுவாமியார் வசித்தமனையின் கதவைத்தட்டினான். அவர் கதவைத்திறந்து அந்தஅந்நியனை உள்ளே அழைத்தார். அவன் போலாந்த மொழியிலே பேசினான். "சுவாமி, எனக்கு நீங்கள் ஒருபேருபகாரம் செய்யவேண்டும்; இறந்துபோன ஒருவருக்காகப் பூசைஒப்புக்கொடுக்கவேண்டும்" என அச்சத்துடன் பின்பக்கம் நோக்கிக்கொண்டு சொன்னான்.

குருவானவர் அவனை உட்காரச் சொன்னார். தாகத்துக்கு அவனுக்குச் சற்று குடிக்கக்கொடுத்தார். "சுவாமி, பூசையைநீங்கள் சீக்கிரம்செய்யவேண்டும்" எனப் பெருமூச்சு விட்டுக்கொண்டுகூறி, பின் "நான்கத்தோலிக்கனல்ல, எனினும் அந்தப்பூசைப்பலி எனக்குச் சமாதானத்தைக் கொடுக்கலாம். ஐயோ, ஓர்ஆத்துமம் எங்கு பார்த்தாலும் என்னைப் பின்தொடர்கிறது. நான்தான் அவளைச் சுட்டுக்கொன்றவன். அவள் என்நல்லஎசமானுடையமகள்" என்றான்.

"நீசெய்தஅக்கிரமம் உன்மனதில் அப்படியே பதிந்துவிட்டதென நினைக்கிறேன். உன்னை அந்தநினைவு உபாதிக்கிறது. அதுதான் எங்கும்உன்னைப் பின்தொடர்கிறது. அவள் நல்லவள் என்கிறாய்; இதற்குள் மோட்சம்போயிருக்கலாம் அல்லவா?"

"இருக்கலாம், சுவாமி. ஆனால், இரவும்பகலும் நான் என்கண்முன் அவளைப் பார்க்கிறேன். பரிதாபமாக அவள் என்னைநோக்குகிறாள். அவள் உயிர்விடுமுன் என்னைப்பார்த்த பார்வை அதுதான்"

"நண்பா, உன்சரித்திரத்தை என்னிடம்சொன்னால் உனக்கு ஆறுதல் ஏற்படலாம். நீ பாவசங்கீர்த்தனம் செய்ய முடியாவிட்டாலும் பரவாயில்லை."

"நான் கத்தோலிக்கன்அல்ல. விளாதிமீர்பிரபுவைப்பற்றித் தாங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள். அவருடைய முக்கியகாரியஸ்தன்நான். அவருடைய சொத்துக்கள் என் கண்காணிப்பில் இருந்தன. அவைகள் ருஷியாவின் எல்லைப்புறத்திற்குச் சற்றுத்தூரத்தில் இருந்தன."

"நான் அவரைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன். சோவியத்அதிகாரிகளிடமிருந்து நெடுங்காலம் அவர் தமது சொத்தைக் காப்பாற்றி வந்ததுபற்றி நான் ஆச்சரியப்பட்டதுண்டு" எனச் சுவாமியார் மொழிந்தார்.

"சுவாமி, சோவியத் அதிகாரிகள் நுழையாத இடங்கள்சில இருந்தன. விளாதிமீர்பிரபு, அவரதுமனைவி, அழகியகுமாரத்தி ஆகியமூவரும் அமைதியுடன் தங்கள்அரண்மனையில் வாழ்ந்துவந்தார்கள். தங்கள் ஒரேமகளை அவர்கள்வெகுஅன்புடன் வளர்த்துவந்தார்கள். குதிரைச் சவாரிசெய்ய அவளுக்கு நானேகற்றுக்கொடுத்தேன். அவள் வேட்டையாடச்செல்லுகையில் நானும்கூடப்போவேன். பிரபுவைப்பற்றிக் கடைசியாகச் சோவியத்அதிகாரிகள் அறியவந்தார்கள். சிலஆட்களை அங்குஅனுப்பினார்கள். அந்தச் சிற்றூரில் ஒருவீட்டை அவர்கள் பிடித்து அங்கிருந்துகொண்டு குழப்பங்களைஎழுப்பவும், பொதுஉடைமையைப்போதிக்கவும் தொடங்கினார்கள்.

"விவசாயிகளே! விளாதிமீர்பிரபுவைப்போல் நீங்களும் ஏன் சொகுசாயும், பெரியவீடுகளிலும் வசிக்கக்கூடாது? அவன்எவ்விதத்திலும் உங்களைவிடச் சிறந்தவனா? உங்களைப்போல அவன் கஷ்டப்பட்டு வேலைசெய்கிறானா?" என்றெல்லாம் ஆவேசத்துடன்கூறி மக்களைத்தூண்டினார்கள்.

"அவர்களின் உபந்நியாசங்களை நான் அடிக்கடிகேட்டேன். அவர்கள் என்னை வெகுவாகப் புகழ்ந்துபேசி என்னையும் தங்கள்கட்சியில் சேர்க்க முயன்றார்கள். அவர்கள்வலையில் நான் விழுந்தேன். தொற்றுநோய் என்னையும்பற்றிக்கொண்டது. அவர்களுடைய கட்சியில் சேர்வதாக நான்வாக்களித்தேன். எனதுஎசமானின்காடுகளை நான்சுற்றிப்பார்க்கச் செல்லும்போதெல்லாம் அவர்களில் எவராவதுஒருவன் எப்பொழுதும் என்னுடன்வந்து என்செவிகளில் விஷத்தைஊட்டி வந்தான். என்எசமானிடம் இதைப்பற்றி நான்ஒன்றுமே சொல்லவில்லை. ஏனெனில், சீக்கிரம் வேலையைக் கைவிட்டு என்புதியநண்பர்களுடன்போக நான்தீர்மானித்திருந்தேன். இந்தச் சமயத்தில் என்தாய் நோயாய்விழுந்தாள். பிரபுவின்குமாரத்தி இனிய உணவுகளுடன் என் தாயைப்பார்க்க அடிக்கடிவருவாள்.

"ஒருநாள்மாலை நான்காட்டிலிருந்து திரும்பிவந்துகொண்டிருந்தேன். பொதுஉடைமைவாதிஒருவன் என்னுடன்இருந்தான். அப்பொழுது பிரபுவின்குமாரத்தி குதிரைமீதுவந்தாள். அவளுடையகையில் பெரிய கூடை ஒன்று இருந்தது. என்னுடன்வந்தவன் என்னைப்பார்த்து: 'நமதுமனைவியரும், மக்களும் கால்நடையாய் நடந்து செல்கையில் இவள்மாத்திரம் ஏன் விலையுயர்ந்த குதிரைமீது செல்லவேண்டும்? நம்முடைய பெண்பிள்ளைகளைவிட இவள்எவ்விதத்திலும் உயர்ந்தவளா?' என்று கோபத்துடன்கூவினான். அத்துடன் 'இதுதான் சரியானசமயம்; நீ பொதுஉடைமைக் கொள்கைகளை நம்பினால், அதைச் செயலில் காண்பிக்கவேண்டும்; இப்பொழுதே காண்பி; கோழைத்தனமாய் நீ என்உத்தரவுக்குக் கீழ்ப்படிய மறுத்தால், அதன்விளைவு என்னஎன்பதை நீஅறிவாய்; சோவியத்துக்கு நீ கீழ்ப்படிந்தாகவேண்டும்'என அவன் பயமுறுத்தும் குரலில்கூறிச் 'சுடு உடனே'என்றான்.

"அவனுடையஉத்தரவுக்குக் கீழ்ப்படியாதுபோனால், உடனேஎன்னைச் சுட்டுக்கொல்வான்என்பது நிச்சயம். ஆதலின் உடனேசுட்டேன். கடுங்காயமடைந்து அவள் கீழேவிழுந்தாள். அருகில்நின்ற என்னைப் பார்த்ததும் உதவிக்குஅழைத்தாள். நான்செய்த அக்கிரமத்தைக் கண்டநான் பயத்துடன் அவளருகில் முழந்தாளிட்டுக் குனிந்தேன். என்உள்ளத்தில் அவநம்பிக்கைபுகுந்தது. 'அலெக்சிஸ்! நீர் என்னருகில் இருந்திருந்தால் இந்த ஆபத்து எனக்குவந்திராது; அவன் ஏன் என்னைச்சுட்டான்? அவனுக்கு நான் எவ்விததீங்கும் செய்யவில்லையே!' என அவள்மெதுவாகக்கூறினாள்.

"உடனேஅவன் சமீபத்தில் அணுகிச் 'சுட்டவன் இவனே'எனச்சொல்லி என்னைச்சுட்டிக்காட்டி, 'என்னிடம் துப்பாக்கி இல்லை; இவனிடம்தான் இருக்கிறது; இவன் எங்கள்கட்சியில் சேர்ந்துவிட்டான்; எங்கள்விருப்பப்படி பழிவாங்கிவிட்டோம்' என்றான்.

"சாகுந்தறுவாயிலிருந்த அவள் என்பக்கமாகப் பார்வையைத்திருப்பினாள். 'ஐயோ, அலெக்சிஸ்! உன் தாயைப் பார்க்கும்படிதானே நான் வந்தேன்'எனக்கூறிப் பெருமூச்சுவிட்டுக் கண்களைமூடினாள். திரும்பஅவைகளைத் திறக்கவேயில்லை. துயரத்தால் நான் பைத்தியம்பிடித்தவன் போலானேன். உடனே அந்தஇடத்தைவிட்டு ஓட்டம்பிடித்தேன். எங்குபோனேனோ, எவ்விதம் உயிர்வாழ்ந்தேனோ தெரியாது.

"நான் எங்குசென்றாலும் அவள் என்னைப் பின்தொடர்ந்தாள். அவளது மார்பின்காயத்தினின்று வடிந்தஇரத்தம் என்கண்முன்நின்றது. விளாதிமீர் பிரபுவின் அரண்மனையைச் சோவியத் அதிகாரிகள் தரைமட்டமாக்கி, அவரைக் கைதியாக்கிச் சிறைப்படுத்தியதாக நான்கேள்விப்பட்டேன். அவருடைய மனைவியார் ஆஸ்பத்திரியில் இறந்தார். தமதுமகளைக்கொன்றவனை அவர்கள்மன்னித்ததுடன் அவன்மனந்திரும்பும்படியாகப் பிரார்த்தித்தும்வந்தார்கள்."

இந்தவரலாற்றைக்கேட்ட குருவானவர் திடுக்கிட்டார். "மகனே! நீ மன்னிக்கப்பட்டாய்; அந்தஆத்துமம் இப்பொழுது பரகதியிலிருக்கிறது" என அவர்கூறினார். திவ்வியபூசை ஒப்புக்கொடுக்கப்பட்டது. அலெக்சிஸ் முழந்தாளிட்டுக் கண்ணீர்வடித்துக்கொண்டே பூசைகண்டான். அவனுடையமனது சற்று நிம்மதியடைந்தது. குருவானவருடனேயே அவன் தங்கிச் சத்தியவேத போதனைகளைக்கற்றுக் கத்தோலிக்கனாயினான்.

"கடவுள் துதிக்கப்படுவாராக; என் இருதயத்தை அழுத்திக்கொண்டிருந்தபாறை அகற்றப்பட்டது; இப்பொழுதுஅவள் என்னைப்பின்தொடர்வதில்லை; அவள் மோட்சத்தில் இருக்கிறாள்; நான்இனிமேல் நெடுநாள் உயிர்வாழமாட்டேன்; சீக்கிரம்அவளை மோட்சத்தில் காணும்பாக்கியத்தைக் கடவுள் எனக்குத்தருவாராக" என அலெக்சிஸ்சொன்னான். ஓராண்டுள் அலெக்சிஸ் இறந்தான்.

## தேவாமுதம் அல்லது ஞானவாசிப்பு

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

பார்க்கிறதில்லை. தேனீக்கள் மகாகசப்பான சாரமுடைய புஷ்பங்களின் பேரில் மொய்த்துஅந்தச்சாரத்தை தேனாகமாற்றிவிடும். ஏனெனில், தேனீக்களுக்கு இத்தன்மையான சுபாவம்உண்டு. உலகப்பிரியரே, பக்தியுள்ள ஆத்துமங்களுக்கு ஒறுத்தல்செய்வதில் வெகுபிரயாசை வருத்தம்உள்ளதென்பதுமெய்தான். ஆனால், மனப்பிரீதியாகச் செய்வதால் எப்படிப்பட்ட அகோரஒறுத்தலும் அவர்களுக்கு இன்பமாய் ஆறுதலாய் மாறிப்போகின்றது. வேதசாட்சிகள் பக்தியுள்ளவர்களாய் இருந்தமையால் இவர்களுக்கு அக்கினியும் கடுஞ்சூளையும் முட்சக்கரங்களும் கத்திவாள்களும் சுகந்த மலர்களாயின. பக்தியானது கொடிய உபாதைகளையும் மரணத்தையுந்தானே இன்பமாய்மாற்றினால் புண்ணிய நற்கிருத்தியங்களை அனுசரிப்பதில் இருக்கும்வருத்தத்தை எவ்வளவோ மதுரமாய் மாற்றிவிடும். கனியாதகாய்களுக்கு உருசிகொடுப்பதும், இன்னுங்கனிந்த பழங்களிலுள்ள கெட்டகுணத்தைஅழிப்பதுஞ் சர்க்கரையின் குணமாம். அப்படியேபத்தியானது மெய்யான ஞானசர்க்கரையாய் ஒறுத்தலிலுள்ள கசப்பையும் இன்பத்திலுள்ள ஆபத்தையும் நீக்குகின்றது. இந்தப் பக்திதான் ஏழைகள்துயரைநீக்கி மகாஇராசருடைய பேராசையை அடக்கித் துன்பப்பட்டவருடைய துயரத்தையும் வனவாசிகளுடைய கஸ்தியையும் அகற்றி உலகத்தில் சஞ்சரிப்பவர்களைப் பாவமயக்கத்தில் அகப்படவொட்டாமல் காப்பாற்றுகிறது. இது மாரிகாலக் குளிரைத் தணிக்கும் உஷ்ணமாம்; கோடைகாலத்து வெப்பத்தைத் தணிக்கும்பனியாம். ஐசுவரியம், தரித்திரம், ஸ்துதி, நிந்தை சகலத்தையும் பிரயோசனமுள்ள தாக்கிவிடும். இந்தப்பத்தியானது நம்மிடத்தில் இருக்குமாகில் சுகத்தையும் துக்கத்தையும் எப்போதும் ஒரேமனமாய் அங்கீகரித்துக்கொண்டு அகமகிழ்ச்சியாருப்போம்.

(தொடரும்)


## அன்ரன் பேக்கரி

பாஷையூரிலே அர்ச். அந்தோனியார் பேரால் தருமஅப்பம் கொடுக்கவிரும்புகிறவர்கள் தங்களுக்குத்தேவைப்படும் அப்பங்களை இலகுவில் வாங்கிக்கொள்ளும்படியாய் அக்கோவிலுக்கு அருகாமையிலே நவமாக நான்அமைத்திருக்கும் 'அன்ரன்பேக்கரி' பெரும்வசதி அளிப்பதாகும் என்பதை இத்தாற் சகலருக்கும் ஞாபகப்படுத்திக்கொள்ளுகிறேன்.

மனேஜர்,
அன்ரன்பேக்கரி,
பாஷையூர்.


## மறியற்காரரும் கமத்தொழிலும்

மறியற்காரரை வேலைகொண்டு கமஞ்செய்வதற்கெனக் கோப்பாயிலே ஓர் கமத்தை அமைக்கும்விஷயமாய் வரையறையான திட்டம்ஒன்றை விரைவிலே சமர்ப்பிக்குமாறு உள்நாட்டு மந்திரியார் யாழ்ப்பாணத்தில் நடத்திய சுற்றுப்பிரயாணத்தின்போது யாழ்ப்பாண மறியற்கூட அதிகாரிகளைக் கேட்டிருக்கின்றார். ஆரம்பத்திலே இந்தத்திட்டத்தின்கீழ் கோப்பாயில் முப்பது ஏக்கர் செம்மண்நிலம் கமச்செய்கைக்கென எடுத்துக்கொள்ளப்படும், பிந்தப்படிப்படியாய் அப்பகுதியிலே கமத்தொழிலுக்கு அதிகஞ்சிறந்த முன்னூறு ஏக்கர்நிலம் மறியற்காரரை வேலைகொண்டு கமச்செய்கைக்குள்ளாக்கப்படும். இந்த மறியற்காரருக்கென அங்கு திறந்தமைதான மறியற்கூடம் அமைக்கப்படும்.

## Order Nisi

IN THE DISTRICT COURT OF JAFFNA

In the matter of the Last Will and Testament of the late Karthigesu Parmanather of Karainagar East.

Deceased.

Testamentary Jurisdiction } No. 1541

Valliammai daughter of Kandappar of Karainagar East.

Petitioner.

Vs.

Paramanathar Sabaratnam alias Thurairatnam of Ponnavalai, Karainagar East.

Respondent.

This matter coming on for disposal before K. D. de Silva, Esquire, District Judge of Jaffna, on the 3rd day of November, 1952, in the presence of Mr. V. K. Rudrasingham, Proctor on the part of the petitioner abovenamed and the affidavit of the petitioner abovenamed dated the 24th day of October, 1952, the affidavit of the attesting witnesses dated the 24th day of October, 1952, and the affidavit of the Notary dated the 16th day of October, 1952, having been read:

It is ordered that the Last Will and Testament No. 31 made by the deceased abovenamed and attested by Mr. K. Arumugam, Notary Public, on the 11th day of June, 1951, the original of which has been produced and now deposited in this Court be and the same is hereby declared proved; and that the petitioner is the Executrix named therein and the petitioner is hereby declared entitled to have Probate issued to her accordingly, unless the respondent abovenamed or any other person or persons interested shall, on or before the 19th day of December 1952, show sufficient cause to the satisfaction of this Court to the contrary.

Sgd. Wm. G. SPENCER,
District Judge.

This 3rd day of Nov. 1952.

Time to show cause extended to 13-2-53 Sgd. K. G. de Silva, D. J.

Printed and Published for the Proprietor by BASTIAMPILLAI SANTIAGOEPILLAI residing at 39, Main Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, January 22-1953